# 31ஆம் நாள் வரலாற்று நினைவு மலர்



## அமரர்

## 'சிவநெறிச் செல்வர்' அருளம்பலம் அதிபர்

கோயில் வீதி, வீரமுனை

சம்மாந்துறை

05.05.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14783

(59)

தொ
இல

112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மண்ணின் மைந்தன்



கருப்பூர்வெளி : 05.10.1950 விருப்பூர்ஒளி : 05.04.2009

## அமரர் சமூகஜோதி சி.அருளம்பலம்

Principal - B.A, Dip in Edu., S.L. P.S.I.

### திதி வெண்பா

வீரமுனை பெயர் சொல்ல விளைந்த நல்மகன்
சீர்மருவும் அழகோனே சின்னவர் அருளம்பலம்
மறைவருட சர்வதாரி பங்குனி இருபத்து மூன்றில்
மாசற்ற ஏகாதசித் திதியில் இறையடி உன்னாத்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76
2009.07.09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14783

## வாழ்க்கை வளம்

சகல வளங்களும் நிறைந்த தமிழும் சைவமும் முறையாக வளர்கின்ற பழம் பெரும் நற்பதியாம் வீரமுனை எனும் பதியில் காலம்சென்றவர்களான சின்னவர், கண்ணம்மைக்கு 1950.10.05ந் திகதி அன்பு மகனாக அமரர்.அருளம்பலம் அவர்கள் பிறந்தார். தெய்வானை, பொன்னையா, அருணாச்சலம், செல்லம்மா, நாகமணி ஆகியோரை உடன் பிறப்புக்களாகக் கொண்டவர்.

இவர் தன் முன்னிலைக் கல்வியை சம்மாந்துறை மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்திலும், உயர் நிலைக்கல்வியை சம்மாந்துறை மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார். இவர் 1974.09.02ல் கணித ஆசிரியராக நியமனம் பெற்றார். பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக பட்டப்படிப்பினை மேற்கொண்டார். தன்னை பட்டதாரியாக வளப்படுத்தினார்.

இவர் 1976.05.16ல் திலகவதியை இல்லற துணையாக கரம் பிடித்தார். அன்பு நிறைந்த இல்லற வாழ்வின் பயனாக உமாமகேசன், (T.O-R.D.D திருமலை) உமாப்பிரபா (தாதி உத்தியோகத்தர், கல்முனை வைத்தியசாலை), யோகேந்திரா, ரம்மியா ஆகியோரைச் செல்வங் களாகப் பெற்றார். யோகநாதனை (T.O.R.D.D அம்பாறை) அன்பு மருமகனாகவும், அபிஷேகனை பேரப்பிள்ளையாகவும் கொண்டு வாழ்ந்தார்.

அமரர் "**சிவநெறிச்செல்வர்**" அருளம்பலம் (அதிபர்) அவர்கள் எமது மண்ணின் மைந்தன். எமது பகுதியில் அசாதாரண சூழல் நிலை ஏற்பட்ட வேளையில் பல புத்திஜீவிகளும், செல்வந்தர்களும் நகரங்களை நோக்கிச் சென்றார்கள். ஆனால் அதிபர், அவர்களை அங்குவருமாறு அழைத்த போது, நான் இந்த மண்ணில் மக்களோடு மக்களாக வாழ்ந்து இங்கு மடிவதையே மேலாக நினைக்கின்றேன். எனக் கூறி செல்ல மறுத்தவர். கொடூர நோய் தன்னைக் கொடுமைப் படுத்திய வேளையில் விரும்பத்தகாத செயற்பாடுகளைக் கண்டு மனம் வருந்திய போது மனம்விட்டுக் கூறினார். " நானும் நகரங்களை நாடிச் சென்று இருந்தால், எனது பிள்ளைகளுக்கு முறையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம். உயர் நிலைக்கு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கலாம் ஆனால் எனது மக்களையும் மண்ணையும் நேசித்தேன் எனக்கு இவ்வாறான அவப்பெயரை ஏற்படுத்தியிருக்கிறார்களே என மனம் நொந்து கதைத்தார். இதன் மூலம் அமரர் சமூக ஜோதி "மண்ணின் மைந்தன்" என்பது தெளிவாகின்றது.

அமரர் செய்த பணிகள் ஒன்றா? இரண்டா? பற்பல எதை எழுதுவது? எதை விடுவது? எதை மட்டுப்படுத்துவது? என யோசிக்கத் தூண்டுகின்றது. இருந்தும் சில பணிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம் என தோன்றுகின்றது.

## கல்விப் பணிகள்

தனது வாழ்வில் முப்பத்தைந்து வருடங்களை கல்விப்பணிக்காக அர்ப்பணித்தவர் "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" எனும் ஔவையின் கருத்துக்கேற்ப கற்பித்த ஆசான். நாம் வாழ்வதற்கு இரு கண்களும் அவசியம். அது போல எமது எதிர்கால உயர்விற்கு கணித அறிவும், தமிழ் அறிவும் முக்கியமாகும். இரு பாடங்களையும் முறையாகவும் சீராகவும் கற்பிக்கும் ஆற்றல் கொண்டவர். இடை நிலை மாணவர்களுக்கு (தரம் 9,10,11) இலகுவாக, தெளிவாக கணித பாடத்தை கற்பிப்பார். உயர் நிலை மாணவர்களுக்கு (தரம் 12,13) சீரிய தமிழைத் தெளிவாகவோதுவார், இலக்கியங்களை சொல்லும் பொருளுந் தோன்றக் கற்றுக் கொடுப்பார்.

தனது கல்விப் பணியினை கோமாரி மெதடிஸ்த வித்தியாலயம், வீரமுனை R.K.M வித்தியாலயம், சொறிக்கல்முனை றோ.க.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கல்விப்பணியை சிறப்பாக மேற்கொண்டார். வீரமுனை R.K.M வித்தியாலயத்தில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக பணிபுரிந்தவர். சம்மாந்துறை கல்வி வலயத்தினுள் முன்நிலை பாடசாலையாக வீரமுனை R.K.M பாடசாலையை தரமுயர்த்தியவர், ஒவ்வொரு வருடமும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை, ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்த பல மாணவர்களின் உயர்வுக்கு வழி காட்டியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயப் பணிகள்

அமரர் அதிபர் அவர்களின் சமயப்பணிகள் சிறப்பானது. சமய நிகழ்வுகளை முன்னின்று நடாத்துபவர். அதன் மூலமே எமது மாவட்டத்தில் இந்துக்கள் நூறு வீதம் வாழும் ஒரே கிராமமாக வீரமுனை திகழ்கின்றது. அவர் செய்த பணிகளை பின்வருமாறு வரையறுக்கலாம்.

01. ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய தலைவராக செயற்பட்டவர். கண்ணகியம்மன் ஆலய திருச்சடங்கினை வழிப்படுத்தியமை, காவியங்களையும், திருக்குளிர்த்திப் பாடல்களையும் அழகாக பாடியமை.

02. இந்துமாமன்றத் தலைவராக செயற்பட்டு அறநெறிப்பாடசாலையின் வளர்ச்சிக்கு வழிகாட்டியமை.

03. ஸ்ரீ சிந்தா யாத்திரைப் பிள்ளையார் ஆலய கணக்காய்வாளராக இருந்தார். இதன் மூலம் ஆலய வரவு செலவுத்திட்டத்தை நெறிப்படுத்தியமை.

04. ஆலய மகோற்சவ காலங்களில் திருமுறைகளை முறையாக ஓதுபவர், முன் ஆயத்தமின்றி சமய, கருத்துக்களை இலகுவாக, அழகாக சொற்பொழிவாற்றுபவர். மக்களுக்கு சமய அறிவைப் புகட்டியவர்.

05. விரதங்களைஅனுட்டித்து மற்றவர்களுக்கு எடுத்து காட்டாக திகழ்ந்தவர். கந்த சஷ்டி விரத காலங்களில் கந்த புராணத்தை பாடிப் பயன் கூறும் வீதம் தனிச் சிறப்பானது. அது போல விநாயகர் பெருங்கதையை விரதகாலங்களில் முறையாகபாடுபவர். திருவெம்பாவை விரத காலங்களில் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பாடல்களை பக்தியுடன் பாடி எம்மை மெய்மறக்கச் செய்வார்.

இவ்வாறு சைவ சமய பணிகளையாற்றியமைக்காக சிந்தா யாத்திரைப் பிள்ளையார் ஆலய மகோற்சவ பிரதம குருவும் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியுமாகிய சிவாகம கலாநிதி அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்ப தாஸசாம்பசிவ சிவாச்சாரியார், அவர்களின் ஏற்பாட்டில் சர்வதேச இந்து மதகுரு பீடம் "**சிவநெறிச் செல்வர்**" "**வித்யா சிரோண்மணி**" எனும் பட்டங்களை வழங்கியும், பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகப் பணிகள்

மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்களுக்காக பல சமூகப் பணிகளை மேற்கொண்டார். அவர் செய்த பணிகளை பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

01. வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்ல நம்பிக்கையாளர் சபை உறுப்பினராக இருந்து இல்ல வளர்ச்சிக்கு வழிகாட்டலையும், ஆலோசனையையும் வழங்கியமை.

02. சம்மாந்துறை தொகுதி இணக்க சபை உறுப்பினராகவிருந்து மக்களின் பிணக்குகளையும், பிரச்சினைகளையும் தீர்த்து வைத்து மக்களிடையே சமரச முயற்சியில் ஈடுபட்டவர்.

03. சம்மாந்துறை பாவலர் பஸீல் காரியப்பர் ரசிகர் வட்ட உறுப்பினராக செயற்பட்டார். கலைஞர்களின் ஆக்கபூர்வமான பணிகளுக்கு உதவி நல்கினார்.

அமரர் சமூகஜோதி அருளம்பலம் அதிபர் அவர்கள் இளமையிலேயே விளையாட்டுத்துறையில் ஆர்வமிக்கவர். மைதான நிகழ்ச்சிகள், கைப்பந்து போன்ற விளையாட்டுக்களில் ஈடுபாடு கொண்டவர். பல நாட்டுக் கூத்துக்களையும், நாடகங்களையும் சிறப்பாக நடித்த கலைஞர், கவிதைகளை திறனாய்வு செய்தல் போன்ற துறைகளில் ஆக்கமிக்கவர்.

இவ்வாறு பற்பல பணிகளையும், செயல்திறன்மிக்க செயற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கும் போது, நோயினால் பீடிக்கப்பட்டார். அப்பொழுதும் தான் பிறந்த மண்ணையும், கல்விச் சமூகத்தையும் சமுதாயத்தையும் நேசித்தார். ஆனால் முதிர்ந்த 2009.04.05ம் திகதி காலனவன் காவு கொண்டுவிட்டான் பூவுடலின் வரலாறு முடியினும் புகழுடலின் வரலாறு பின் தொடரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் ஜேம்ஸ் ராஜேந்திரா அவர்கள் செயற்படுத்தி வந்த செயற்படுத்த நினைத்திருந்த செயற்பாடுகளையும். அவர் இடைநடுவில் இட்ட பணியில் இருந்து இடைவிடாது தொடர்ந்து செயற்படுத்தி செயலுருவம் கொடுத்து நெறிப்படுத்திய பெருமைக் குரியவராக காணப்பட்டவர் அமரர் சின்னவர் அருளம்பலம் அவர்களாகும்.

நான் இவருடன் சுமார் 12 வருடங்கள் ஆசிரியராகவும், அன்னாருக்கு பக்க பலமாக 6 வருடங்கள் பிரதி அதிபராகவும் சது/ வீரமுனை R.K.M வித்தியாலயத்தில் கடமை புரிந்தவன் என்றவகையில் அன்னாரைப் பற்றியும், அன்னார் பாடசாலைக்கும் சமூகத்திற்காகவும் ஆற்றிய பணிகள் பற்றிகூற வேண்டியது எனது தலையாய கடமைகளில் ஒன்றாகும்

அன்னார் எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பதற்கிணங்க இரண்டு பாடங்களையும் சரளமாக இடர்பாடின்றி கற்பிக்கும் திறன் கொண்டவர். அன்னாரின் கற்பித்தலால் எமது கிராமத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் பலர். ஆனால் அவர்களின் ஒரு சிலர் இன்று அதனை மறந்து செயற்படுவது ஏனோதானோ தெரியவில்லை. இருப்பினும் இவர் தாம் மரணிக்கும் காலம்வரை பாடசாலையின் அதிபராய் இருந்து தரம் 10,11 மாணவர்களுக்கு கணித பாடம் கற்பித்து வந்தார்.

இவர் தினமும் எம்பெருமான் ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையாரைத் தரிசித்து காலை 7.15 மணிக்கு முன்னர் பாடசாலை சென்றிருப்பார். நாங்கள் பாடசாலை சென்று அதிபர் அறைக்குச் சென்றால் அவர் தமது நெற்றியில் பிரகாசிக்கும் விபூதிப் பூச்சும், நெற்றிக் கண் போன்ற சந்தணப் பொட்டுடன் அதிபர் கதிரையில் இருந்து காலை ஆட்டியபடி தமக்கு முன்னால் உள்ள கடிகார முள்ளை நிமிர்ந்து பார்ப்பதுடன், இது அவர் ஆசிரியர்களுக்கு காட்டும் ஓர் சைகை இதைக் கண்ட ஆசிரியர்கள் மறுநாள் 7.30 மணிக்கு முன்னர் பாடசாலை வந்திருப்பார்கள். மாறாக எந்த ஆசிரியருக்கும் அவர் ஏசியது கிடையாது. மாறாக அவர் அடிக்கடி என்னிடம் கூறும் விடயம் யாதெனில் எமது பாடசாலை ஏதோ ஓர் இடத்தில் உள்ளது இதை நாம் தொடர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வடையச் செய்ய வேண்டுமே தவிர கீழ் நிலைக்கு இட்டுச் செல்லக் கூடாது இதற்காக நாம் சக ஆசிரியர்களைக் கொண்டு அயராது செயற்படவேண்டும் என்பார். அதன் பிரகாரம் தனது பதவிக் காலத்தில் செயற்பட்டு கல்வி, மற்றும் ஏனைய வளங்களில் அபிவிருத்தியும் கண்டார் அவற்றுள் கல்வியைப் பொறுத்த மட்டில்

**01.** **தரம் 10, 12 மாணவர்கள் 73 பேருக்கு வருடாந்தம் 5000/= ஜனாதிபதி புலமைப் பரிசில் உதிவுத் தொகை கிடைக்கப் பெற்று வருகின்றது.**

**02.** **தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்**

| ஆண்டு | தோற்றியோர் | சித்திபெற்றோர் |
|---|---|---|
| 2003 | 31 | 05 |
| 2004 | 18 | 02 |
| 2005 | 21 | 02 |
| 2006 | 18 | 02 |
| 2007 | 26 | 07 |
| 2008 | 17 | 03 |

**03.** **க.பொ.த. சா/தரம்**

| ஆண்டு | தோற்றியோர் | சித்திபெற்றோர் |
|---|---|---|
| 2002 | 53 | 40 |
| 2003 | 36 | 34 |
| 2004 | 33 | 24 |
| 2005 | 47 | 37 |
| 2006 | 48 | 30 |
| 2007 | 47 | 33 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. க.பொ.த உயர்/ தரம்

| ஆண்டு | தோற்றியோர் | சித்திபெற்றோர் | பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் |
|---|---|---|---|
| 2002 | 13 | 2 | 2 |
| 2003 | 23 | 9 | 9 |
| 2004 | 19 | 9 | 9 |
| 2005 | 28 | 18 | 18 |
| 2006 | 33 | 13 | 13 |
| 2007 | 25 | 13 | 13 |

**அடுத்து ஏனைய வள அபிவிருத்தியைப் பொறுத்த மட்டில்**

1. நூல்நிலையம் கட்டப்பட்டு தளபாடங்களுடன் நூல்கள் பெற்றமை

2. கணணி அறை கட்டப்பட்டு 20 கணணி, 1பிறின்ரர், 1ஸ்கேனர் பெற்றமை

3. பாராளுமன்ற உறுப்பினர் க. பத்மநாதனின் உதவியைப் பெற்று
   1. ஆராதனை மண்டபத்திற்கு 175 கதிரைகள் பெற்றமை
   2. ஒலிபெருக்கி பெற்றமை
   3. ரெலிபோன் வசதி
   4. 200' சுற்று மதில்
   5. 100000/= செலவில் ஆராதனை மண்டபம் மேல்மாடி திருத்தம்

4. பாராளுமன்ற உறுப்பினர் P. தயாரத்ன வின் உதவியைப் பெற்று 50000/= பெறுமதியான பேண்ட்வாத்திய கருவிகள் பெற்றுள்ளமை.

05. பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் சந்திர நேருவிடமும் பாராளுமன்ற உறுப்பினர் இமாமிடமும் உதவி பெற்று தலா ஒரு இலட்சம் வீதம் (இரண்டு இலட்சம்) 200000/= பெற்று விளையாட்டு மைதானம் திருத்தியமை

06. போட்டோ பிரதி இயந்திரம் பெற்றமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. புறஜெக்டர் பெற்றுள்ளமை

08. தொலைக்காட்சி பெட்டி 2 பெற்றுள்ளமை

09. C.D பிளேயர் பெற்றமை

10. நீர் இறைக்கும் பம்பு பெற்றுள்ளமை

11. பாடசாலை நுளைவாயில் அலங்காரம்

12. அதிபர் காரியாலய முன் வேலி அலங்காரம் செய்துள்ளமை

மேற்காணும் செயற்பாடுகளை பதவிக்காக அலையும் கூட்டம் உள்ள காலத்தில் தன்னை தேடிவந்த தனக்கு அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டஅதிபர் என்ற முத்திரையைக் கொண்டு சற்றும் தளராது மேலதிகாரிகளோடு முரண்படாவண்ணம் செயற்பட்டு பல சேவைகளைப் புரிந்து காலனவன் அழைக்க எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மண்ணுலகம்விட்டு விண்ணுலகம் சென்ற எங்கள் வழிகாட்டியான அமரர். சி.அருளம்பலம் அவர்களின் சேவைகளை பட்டியற்படுத்திக் கொண்டே போகலாம்.

இவ்வாறு காலவனால் கவர்ந் தெடுக்கப்பட்ட எம் அதிபரின் பிரிவில் ஏங்கித் தவிக்கும் அனைவருக்கும் இப்பாடசாலையின் கல்விச் சமூகம் இந் நினைவு மலர் வெளியிடுவதில் ஆத்ம திருப்தியடைகின்றோம். அத்தோடு அவருக்கு சொர்க்கவாசல் கிடைக்க எம் பெருமானை நாம் தினமும் பிராத்திக்கின்றோம்.

**திரு. க. இரத்தினேஸ்வரன்**
**ஆசிரியர்**
**வெளியீட்டுக் குழு சார்பில்**

*மதிப்பையும் மரியாதையையும் கேட்டுப் பெறக்கூடாது இறைவனிடம் மட்டுமே நாம் வெற்றி பெறுவதற்கான வழியை கெஞ்சிக் கேட்டுப் பெறலாம் - பாபா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச இந்துமத குருபீடம்

## INTERNATIONAL HINDU RELIGIOUS GURU PEEDAM

(APPROVED BY THE GOVERNMENT OF SRI LANKA)

## Sri Siththivinayakar Temple

30,St.Anthony's Mawatta, Colombo - 13.
Tel / Fax : 2433468 Cell : 0722 - 422239 : E.Mail :
ivappathasan@yahoo.com


**அமரர் அருளம்பலம்** அவர்களின் மறைவு குறித்து
**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**
அவர்களின் **அனுதாபச் செய்தி**

சரித்திரப் பிரசித்தி பெற்றதும், செந்நெல் விளைநிலங்களும் செழுநீர் தடாகங்களும் ஒருங்கே அமைந்ததும் பல சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டதும் சீர்பாததேவியால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் பேரருள் கொண்டதுமான வீரமுனை எனும் பதியில் சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டி பல ஆன்மீக, ஆசிரியப் பணியாற்றி பின்னர் அதிபராகவும் பல்லாண்டு பணி புரிந்தவரும் தமது இறுதிக்காலம் வரை சிந்தனையாலும் செயலாலும் சமய, சமூகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவருமான அமரர் அருளம்பலம் அதிபர் அவர்களின் மறைவு வீரமுனை மக்களுக்கு பேரிழப்பாகும்.

தாம் வாழும் காலத்தே தமது நற்பணிகளால் மாணவ சமுதாயத்தின் மதிப்பினைப் பெற்று புகழீட்டியவர். நல்லோர் நட்பும், இறை தொண்டும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களை நல்வழிப்படுத்தும் பெரும் போக்கும் கொண்டிருந்த அமரர் அவர் தம் சேவைகளைப் பாராட்டி சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஆன்மீகப் பெருவிழாவில் 2002ம், 2005ம் ஆகிய இரு ஆண்டுகளிலும் இரு தடவைகளிலும் தென்னிந்திய பிரபல திரைப்பட நடிகர் சரத்பாபு அவர்களால் '**வித்யா சிரோமணி**'' ''**சிவநெறிச் செம்மல்**'' போன்ற கௌரவ விருதுகளைப் பெற்றவர்.

கடந்த 23 ஆண்டுகளுக்கு மேலாக எமது இனிய நண்பனாக, அன்பனாக, தொண்டனாகப் பழகியவர். இறுதிக் காலத்திலும் அவர் இறைபதம் அடைவதற்கு பத்து நாட்களுக்கு முன்பதாகக் கூட அவர் மீதிருந்த அன்பின் ஈர்ப்பால் வீரமுனை சென்று அவரைப் பார்த்து ஆறுதல் கூறியது மனதிற்கு ஆறுதலளிக்கிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து அவர்தம் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள், மாணவர்கள், வீரமுனைவாழ் மக்கள் அனைவருக்கும் எமது சர்வதேச இந்துமத குருபீடத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**
**கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**
**அகில இலங்கை இந்துமத குருபீடம்**
**அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்**
**கொழும்பு.**

*மனத்தின் மாசைக் கழுவுதற்காக பெரியோர்கள் பலவித வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள். இதில் மிக சிறந்தது பிரார்த்தனையாகும். ஆரம்பத்தில் உலக விஷயங்களில் பெரும்பாலும் நேரத்தைப் போக்கினாலும் ஒரு சில மணி நேரமாவது பிரார்த்தனையில் செலவு செய்யும் வழக்கம் ஏற்படின் அந்த நேரம் வரைக்கும் உலகத்தைத் துறந்தவராவோம்.*

*- இந்து தர்ம சாஸ்திரம் -*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமுனை இராம கிருஷ்ண மிஷன் பாடசாலை அதிபராகிய அமரர் சின்னவர் அருளம்பலம் அவர்களின் நினைவு அஞ்சலி

அமரத்துவம் எய்திய சின்னவர் அருளம்பலம் அவர்கள் வீரமுனை இராம கிருஷ்ண மிஷன் பாடசாலையின் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபரும், ஆசிரியருமாவார். அத்துடன் இவர் வீரமுனை அருள்மிகு ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தின் நிருவாக சபையின் கணக்காய்வாளராக கடந்த 01.06.2000 முதல் அமரத்துவம் அடையும் வரையான ஒன்பதாவது வருடத்தைப் பூர்த்தி செய்யாமலே இறைபதம் எய்தி விட்டார். இதற்கு முன்னரும் இவ்வாலய நிருவாக சபை உறுப்பினராகவும், பொருளாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

உலகில் தோன்றும் கோடானுகோடி உயிரினம் யாவும் உண்டு உயித்து மறைகின்றன. ஆனால் அவற்றிலிருந்து வேறுபட்ட மனிதன் மானிடப் பிறவியெடுத்த வாழ்க்கையின் செயற்பாடுகளெல்லாம் விட்ட குறை தொட்ட குறையாகுமென்று ஆன்றோர் வாக்குப்படி ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையைப் பற்றியும், தம்முன்னோரின் வாழ்க்கை முறையையும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இது தெளிவாகப் புலப்படும்.

எண்ணரிய பிறவியில் மானிடப்பிறவி மிகவும் அரிதானது என ஒளவைப் பிராட்டி கூறியுள்ளார். எனவே கிடைத்தற்கரிய இப்பிறவியைப் பெற்றவர்கள் அதனைத் தனக்கும் பிறருக்கும் உபயோகமுடையதாக ஆக்கிக் கொள்வது கற்றறிந்த அறிவுடையோர் கடமையும் கட்டுப்பாடு மாகும். அதுமட்டுமல்லாமல் மற்றையோருக்கும் வழிகாட்டியாக இருப்பது சாலச் சிறந்ததாகும். இந்நிலையில் மறைந்த அருளம்பலம் அவர்களின் வாழ்க்கையை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தொழில் தவிர இவர் ஆத்மீகப் பணியில் மிகவும் ஈடுபாடு கொண்டு அயராது உழைத்தவர். ஊருக்கு உழைத்தவர்கள், கோயிலுக்குத் தொண்டாற்றியவர்கள், மனித மேம்பாட்டிற்குச் சேவை செய்தவர்கள் ஆகியோர்களில் இவரும் ஒருவராவார். கோயிலுக்குத் தொண்டு சேவை வழிபாடு முதலியவற்றில் மிக ஈடுபாடாக இருந்தவர்.

மானிட வாழ்க்கையில் ஏற்படும் வம்பு தும்பு, சோலி சுரட்டு ஆகிய வற்றிலிருந்து முற்று முழுதாக விலகிக் கொள்ளும் இயல்புடையவராகத் திகழ்ந்தார். ஆலய நிருவாகத்தில் மிகவும் நேர்மையாகவும் நேர்த்தியாகவும் கடமையாற்றியவர் ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையாரின் நிரந்தர பக்தராகத் தொண்டு செய்து இந்து சமயத்தவர்களுக்கும் சமயத்திற்கும் வழிகாட்டியாகவும் திகழ்வதோடு ஆலயத்தினுள் நிருவாக சபையின் கணக்காய்வாளர் பதவியில் பலகாலம் திறம்படச் செயல்பட்டவர்.

இவரது பிரிவுத் துயரால் வாடி நிற்கும் அவரது மனைவி மக்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆலயத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றேன்.

**: ஓம் சாந்தி சாந்தி சாந்தி :**

**ஞா. இராசகோபாலபிள்ளை**
**கௌரவ தலைவர்**
**ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம்,**
**வீரமுனை.**

*மோட்சம் என்பது என்ன அது எங்கோ தொலைவில் இருப்பதாக நாம் நினைக்கின்றோம். ஆனால், பரிபூரணமான அன்பு நம் மனதில் நிறையும் பொது மோட்சத்தின் எல்லையை நாம் தொட்டுவிடுவோம்.*

*- பாபா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் நாமங்களை நினைத்தவனாக!

உலகிலே எத்தனையோ மனிதர்கள் பிறக்கின்றார்கள் இறக்கின்றார்கள். ஆனால் ஒரு சிலரின் நாமமே உலகத்தில் நிலைத்து நிற்கின்றன. இந்த வகையில் தனக்கென ஓர் இடத்தை எல்லோர் உள்ளக் கிடக்கையிலும் ஏற்படுத்தி இன மத குல வேறு பாடு இன்றி வாழ்ந்தவரே அமரர் அருளம்பலம் அதிபராவார். இவர் எனது நண்பனாக மட்டுமல்லாது என்கீழ் அதிபராக பணியாற்றிய பெருமையை எனக்குத் தந்துள்ள ஓர் முத்தமிழ் வித்தகன் என்றால் மிகையாகாது. புன்னகை பொழியும் முகத்துடன் எக்காரியத்தையும் இலகுவாகச் செய்யும் திறன் கொண்ட ஒரு மாமனிதன். இவரின் இழப்பு எம் சம்மாந்துறைக் கல்வி வலயத்தில் ஈடு செய்யமுடியாத பேர் இழப்பாகும்.

கல்வியின் ஒளி கொண்டு மாணவச் செல்வங்களின் வாழ்வில் இருளகற்ற அவர் மேற்கொண்ட முயற்சிகள் பலவாகும். இதனால் சது/வீரமுனை இராமகிருஸ்ண மிசன் வித்தியாலயத்தை சம்மாந்துறை வலயத்திலே ஓர் புகழ் மிக்க வித்தியாலயமாக மிளிர்வதற்கு பணியாற்றிய பெருமை இவரையே சாரும். இவருடைய சிறப்புக்கள் சொல்லில் அடங்காதவை இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட ஓர் அதிபரை எமது சம்மாந்துறை கல்வி வலயம் இழப்பது என்பது மிகவும் துரதிஸ்டவசமானது.

**"தோன்றிப் புகழோடு தோன்றுக**
**அஃதிலார் தோன்றித் தோன்றாமை நன்று"**

என்னும் வள்ளுவரின் வாக்குப்படி பிறக்கும் பொழுதே புகழோடு தோன்றிப் பிறந்து மண்மேல் இறக்கும் வரை புகழோடு வாழ்ந்து மண்ணினின்று மறையும் பொழுது மங்களம் புகழ் பெற மறைந்தவர் அமரர் அருளம்பலம் என்றால் மிகையகாது. **"தான் பெற்ற இன்பம் பெறுக**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ்வையகம்**" என்னும் பொன்மொழிக்கு அமைய தான் சது/வீரமுனை இராமகிருஸ்ண வித்தியாலயத்தின் அதிபராக இருந்து அயராது பணியாற்றிய பெருமைக்குரியவர் அமரர் அருளம்பலம் ஆவார்.

அன்னாரினை இழந்து துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் எமது கல்வி வலயம் சார்பாக இவ்வலயத்தின் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன். இவ்வாறான பெரும் தலைவனை இழப்பது என்பது மனித மனங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் அல்ல என்பது உண்மை. ஆனாலும் இறைவன் இட்ட பணி எதுவும் நடப்பது நடந்தே தீரும் எனும் கீதாசார மொழிகளை நினைத்தவனாக அமரத்துவம் அடைந்த அருளம்பலத்தின் ஆத்மா இறைவனடி சேர எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றேன்.

**அல்ஹாஜ் எம்.ரீ.ஏ. தௌபீக்**
**வலயக்கல்வி பணிப்பாளர்**
**வலயக்கல்வி அலுவலகம்**
**சம்மாந்துறை**

*இறைவனின் அருளைப் பெறுவதற்கு நாமஸ்மரணையே போதுமானது. நிரந்தர பகவந் நாமஸ்மரணையால் பக்தி, ஞான, வைராக்கியங்கள் அபிவிருத்தி அடைகின்றன. எந்த துக்கம் வந்தாலும் எந்த கஷ்டம் வந்தாலும் அவன் நாமம் உங்கள் நாவில் நடனமாடிக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் வெறும் உதட்டளவில் சொல்லிக் கொண்டிருப்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. முதன் முதலில் உங்கள் பாவம் பரிசுத்தமானதாக இருக்க வேண்டும். கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் பக்தி குறைவதும், ஆசைகள் நிறைவேறினால் பக்தி அதிகரிப்பது என்பதும் சரியல்ல. கஷ்ட நஷ்டங்கள் வருவது உங்கள் நன்மைக்காகவே.*

*- பாபா-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.L.MOHAMED MUKTHAR,
Justice of the Peace (Whole Island),
B.A (Hons), PGDE, Dip - in - Media Democracy (Denmark)
Freelance Journalist- ANCL, SLBC

16.04.2009

ஏப்ரல் 05ம் திகதி இரவு 7.45 மணிக்கு திடீரென எனக்கு தொலைபேசி அழைப்பொன்று வருகிறது. தொலைபேசியின் மறுமுனையில் அதிபர் கோணேசமூர்த்தி தளுதளுத்த குரலில் அதிபர் அருளம்பலம் மாமா காலமாகிவிட்டார் என்ற செய்தியை கூறுகிறார். இந்தச் செய்தியை கேட்டதும் அதனை நம்பமுடியாமல் தவித்து எனக்குள் நான் அழுதேன். ஏனெனில் சுமார் இரண்டு மாதகாலமாக ஒரு கூட்டம் அவரை பாடாய் படுத்தியதையும் அதனால் அவருக்கு ஏற்பட்ட வேதனையையும் எண்ணி அழுதேன்.

அமரர்.சி.அருளம்பலம் அதிபர் அவர்களும் நானும் 1993/94 காலப்பகுதியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்களாக அறிமுகமானோம். அன்றிலிருந்து தொடங்கிய ஆத்மார்த்த உறவு இறுதிவரை தொடர்ந்தது. அவர் ஒரு கணவான், நேர்மையாளன், எல்லாவற்றிற்கும் மேலாக வீரமுனை கிராமத்திற்காகவும், அக்கிராமத்தின் ஒரேயொரு பாடசாலையான R.K.M. MV த்திற்கும் தன்னை அர்ப்பணித்த தியாகி.

பாடசாலை நடாத்துவதில், ஆசிரியர்களை தேடிக்கொள்வதில் அவர் பல சவால்களை எதிர்கொண்டார். ஆனால் அதனை அவர் அலுவலகத்திற்கு கொண்டு வந்து பிரச்சினையாக காட்டாமல் ஏனைய அதிபர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். பாடசாலைக்குப் பொறுப்பான அதிபராக இருந்திட்ட போதிலும் அவர் மாணவர்களுக்கு கணிதம், தமிழ் பாடங்களை கற்பிக்கும் நல்லாசிரியனாக திகழ்ந்தார்.

தன்னை நோய் ஆட்கொண்ட போதிலும் பாடசாலைத் தொடர்பை துண்டிக்காமல் இயலாத நேரத்திலும் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாடசாலை விடயங்களை பகிர்ந்து கொள்வார்.

அன்னை சீர்பாததேவி சிறுவர் இல்லத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து தொண்டு புரிந்தார். பாடசாலை நேரமல்லாத வேளைகளில் இவ்வில்லத்திற்கும் இங்குள்ள மாணவர்களுக்கும் தொண்டு புரிவதை தெய்வீகப் பணியாக கருதினார்.

கருணையுள்ளம் கொண்ட இந்நேர்மையாளனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக கொடுத்தவன் எடுத்துக் கொள்ளும் போது அதனை எம்மால் தடுக்க முடியுமா?

ஏ.எல். முகம்மட் முக்தார்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

A.L.MOHAMED MUKTHAR
J.P (Whole Island), SLEAS
DEPUTY DIRECTOR OF EDUCATION
ZONAL EDUCATION OFFICE
SAMMANTHURAI

Residence: 478E, Alim Road,
Sainthamaruthu- 16, Sri Lanka.
Tel.No : 0094-67- 2229082
0094-60 -2679496
0094-71- 4871008 (Mobile)

Office: Zonal Education Office,
Sammanthurai, Sri Lanka.
Tel.No: 0094-67- 2261075
e-mail: mukthardde@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சது/வீரமுனை இராம கிருஷ்ணமிஷன் மகாவித்தியாலயத்தின் அதிபராக் கடமையாற்றிய அமரர்.எஸ்.அருளம்பலம் அவர்கள் காலஞ்சென்ற செய்தியை கடந்த 05.04.2009 அன்று கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்ற போது திருகோணமலை துளசிபுரத்தில் வைத்து நண்பன் M.H.அஸீஸ் மெய்டீன் மூலம் அறிந்து வேதனைப்பட்டேன். தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டமையால் இவரது இறுதிக் கிரியையில் கலந்து கொள்ள முடியாமல் போனதையிட்டு மேலும் கவலையடைந்தேன்.

மரணம் என்பது இயல்பான ஒன்றுதான். ஆனாலும் அமரர்.அருளம்பலம் அவர்களது மரணம் ஒரு பேரிழப்பாகும். சம்மாந்துறை வலயத்தில் அதிபர் தரம் பெற்ற தமிழ் அதிபர்கள் ஒரு சிலர் மட்டுமே உள்ளனர். இ.அ.சேவை -2-I ஐச் சேர்ந்த இவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

1978 ஆம் ஆண்டு கல்விப் புலத்தில் சேவைக்குச் சேர்ந்த இவர் சுமார் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஒரு ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராகக் கடமையாற்றினார். ஆர்.கே.எம்.வித்தியாலய த்தின் முன்னைநாள் அதிபர் அமரர்.ஜேம்ஸ் ராஜேந்திரா அவர்கள் அகால மரணமடைந்ததைத் தொடர்ந்து ஏற்கனவே பிரதி அதிபராகக் கடமையாற்றிய இவர் 2002 ஆம் ஆண்டு 10ம் மாதம் அதிபராகப் பொறுப்பேற்று இறக்கும் வரை தனது கடமையைச் சிறப்பாக ஆற்றினார். அத்துடன் இவர் வீரமுனையில் பல சமய சமூக அமைப்புக்கள் ஊடாக பல பணிகள் புரிந்தவர்.

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள், பாடசாலைச் சமூகம், ஊர்மக்கள் ஆகியோருடன் சேர்ந்து துயரத்தில் பங்கெடுப்பதுடன், அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றேன்.

**ஆர். சுகிர்தராஜன்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**சம்மாந்துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெருதல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்திவ்வுலகு"

அன்பிலே வளர்ந்து, அறிவிலே வளர்ந்து ஆற்றலில் மளிர்ந்து, பண்பிலே சிறந்து, துன்பத்தைத்துறந்து, கடமையிலே கண்ணியமாய் பொறுமையின் இருப்பிடமாய் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு பலவளமும் பெற்று இனிது வாழ்ந்தவர் அமரர் சி. அருளம்பலம் அதிபர் அவர்கள்

தான் மரணிப்பதற்கு இருவாரத்திற்கு முன்னர் இறுதியாக தனது பாடசாலையைத் தரிசனம் செய்து மேற்பார்வை விடயங்களைக் கவனித்த பிற்பாடு ஆசிரியர்சங்கப் பொதுக் கூட்டத்தினையும் நடாத்தியிருந்தார். அந்நிகழ்வுகளை இப்பொழுதும் கூட சகல ஆசிரியர்களும் நினைத் துப்பார்க்கின்றனர். தனது உடல் நிலை மிக மோசமாகப் பாதிக் கப்பட்டிருந்த போதிலும் கூட அதனைப் பொருட்படுத்தாமல் அவர் நிகழ்த்திய பேச்சு இப் பொழுதும் கூட என் காதுகளில் எதி ரொலித்துக் கொண்டிருக்கின்றது. அதுவே அவரது இறுதிப் பேச்சாகவும் இருந்தது.

அலுவலகப் பணிகளை மிகத்திறம்பட நடாத்தியிருந்தார் என்பதற்கு அலுவலக நாற்சுவர்களுமே சான்று ஏனெனில் நிருவாக விடயங்களுக்குத் தேவையான அனைத்து முக்கிய தகவல்களும் சுவர்களில் காணப்படுகின்றன.

அதிபராய் மட்டுமல்லாது கணிதபாடத்தினை போதிக்கும் ஆசானாய் இருந்து வந்துள்ளார். இவரது சேவையைப் பெற்றவர்கள் எண்ணிலடங்கா... வீரமுனை, சம்மாந்துறை, காரைதீவு, மல்வத்தை போன்ற பிரதேச மாணவர்களுக்கு கணித அறிவூட்டி அவர்கள் வாழ்வுயர வைத்துள்ளார்.

அவரது எண்ணம் சிந்தனையாவுமே பாடசாலையாக இருந்தது. இவ்வேளையிலே தமது பணிகளை எம்மிடத்தில் ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளார். எனவே அன்னாரது ஆத்மா சாந்தி பெறச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமானால் அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வீரமுனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தினை பிறர் மெச்சும் வண்ணம் நிருவாக நடவடிக்கைகள், கல்விப் பெறுபேறுகள், சமூக கலாசார நிகழ்வுகளில் முன்னிலையில் திகழ அனைவரும் ஒத்துழைப்போமாக.

அன்னாரின் பேரிழப்பால் துயருறும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திப்போமாக.....

**முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு**
**பிடிசாம்பல் மண்ணாவதுங் கண்டு பின்புமிந்த**
**பிடிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னம்பல**
**அடிசார்ந்து நானுய்ய வேண்டுமென்றேயறிவாரிலையோ...**

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**திரு. ச. ரகுநாதன்**
**பதில் அதிபர்**
**சது / வீரமுனை R.K.M.வித்தியாலயம்**

*சுத்த தண்ணீரில் உப்பைப் போட்டால், சுத்த தண்ணீரும் உப்பாகிவிடும். அதே போல் நாம் நல்ல மனிதராய் இருந்தாலும் கெட்டவர்களுடன் சகவாசம் செய்தால் நாமும் கெட்டவர்களாகி விடுவோம். அதனால் எப்பொழுதும் நல்லவர் சகவாசத்தைப் பெறவும்.*

*-இந்து தர்ம சாஸ்திரம்-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் என்றோவொரு நாள் மரணிப்பான் என்பது இயற்கை நியதியாகும். எனினும் ஒரு மனிதன் வாழுகின்றபோது சமூகத்திலே பதிக்கின்ற நினைவுகள் அவன் மரணத்தின் போது சமூகத்திலே பதிக்கின்ற நினைவுகள் அவன் மரணத்தின் போது எம்மைக் கவலையடைய வைக்கிறது. அந்தவகையில் கடந்த 05.04.2009ம் திகதி மரணமடைந்த அமரர் அருளம்பலம் ஐயா அவர்களின் செய்தி எம் காதுகளில் பேரிடியாக விழுந்து மனதைக் கலக்கமடைய வைத்து கண்களை நீரூற்றாக்கியது.

படித்த பலரை உள்ளடக்கிய வீரமுனைக்கிராமத்தில் ஒரு இலக்கான மனிதராக, மற்றவர்களுக்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டிய அமரர் அருளம்பலம் ஐயா அவர்களின் மரணத்தையிட்டு தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளின் அம்பாரை மாவட்ட அரசியல்துறை பெரும் கவலையடைவதோடு, அன்னாரின் குடும்பத்தினர்க்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றது.

ஒரு மனிதன் உயிரோடு இருக்கின்றவரை அவனுடைய சேவைகளும் பணிகளும் அளக்கப்படுவதில்லை. அவனுக்கு மரணம் ஏற்படுகின்ற போதுதான் அவனுடைய நற் செயற்பாடுகள் சமூகத்தின் அளவு கோல்களினால் அளக்கப்படுகின்றது. அந்தவகையில் அமரர் அருளம்பலம் ஐயாவின் இழப்பு வீரமுனைக் கிராமத்தின் புத்திஜீவிகள் பகுதியில் நிரப்ப முடியாத வெற்றிடம் ஆகியுள்ளது.

வீரமுனைக் கிராமத்திலே ஆலயம், பாடசாலை, சமூகநிறுவனங்கள் வாயிலாக அவரின் பன்முகப்பாங்கான சேவைகள் வீரமுனைக் கிராமத்தின் முன்னேற்றப்பாதையிலே முக்கிய மைல் கற்கள் ஆனதை எவரும் மறுக்க முடியாது. பாடசாலை அதிபராக பல ஆண்டுகள் பதவி வகித்த அவரின் கல்விப் பணிகள் மறக்க முடியாத பணிகள் ஆகிவிட்டது. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமுனைக் கிராமத்தினை மையப்படுத்திய பல்வேறு வேலைத் திட்டங்களின் போது அவர் வழங்கிய ஆலோசனைகளும் பங்களிப்புக்களும் எமது அம்பாறை மாவட்ட அரசியல் துறையினால் ஒரு போதும் மறக்கமுடியாதவை.

இறைவனுடைய அவையிலே அருளம்பலம் ஐயாவினுடைய தேவை ஏற்பட்டதாலையே இறைவன் அவரை இடைநடுவே தன்னோடு இணைத்துக் கொண்டானோ என எம்மனதை ஆறுதல் படுத்துகிறோம். அன்னாரின் பிரிவில் துயருறும் அவரின் குடும்பத்தார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை சார்பிலும் வீரமுனை அரசியல் செயலகத்தின் சார்பிலும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதல்களையும் கண்ணீர் மல்கத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**“இரவல் தந்தவன் கேட்கின்றான்**
**இல்லையென்றால் அவன் விடுவானா?”**

**க. மகேந்திரன்**
**அமைப்பாளர்,**
**சம்மாந்துறை தொகுதி**
**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி**

*நீ ஒழுக்க சீலனாக இருந்தால் உனது உடலே பிரகாசமாக இருக்கும். சமூக சேவையும், கடவுள் வழிபாடும் உன் உடல் அழகிற்கு பாதுகாப்பாக இருக்கும்.*
*- பாபா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அருளம்பலம்

வீரம் செறிந்த வீரமுனை மண்ணில் மலர்ந்து ஐம்பத்தொன்பது ஆண்டுகள் மக்களுடன் வாழ்ந்து மக்களால் நேசிக்கப்பட்டவர், மனித நேயம் கொண்டவராக வாழ்ந்து வீரமுனை மண்ணிற்கே வளமாகி எம்மை துயரத்தில் தவிக்கவிட்டு இறைபதம் அடைந்தார் நண்பன் முருகேசு என அழைக்கப்பட்ட அருளம்பலம் அவர்கள்.

வீரமுனை R.K.M வித்தியாலயம், சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவனாக கற்றுத்தேறி ஆசிரியராக அதிபராக உயர் நிலை அடைந்து வீரமுனை மக்களின் உயர்விற்காய் அளப்பரிய சேவைகள் பல புரிந்து அனைத்து மக்களின் பாராட்டிற்கும் கௌரவத்திற்கும் ஆளானார் இவரிடம் கற்ற பலர் இன்று பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி இவருக்கும் ஊருக்கும் பெருமை சேர்க்கின்றனர் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பர்

ஒரு மனிதனின் இரு கண்கள் எப்படி முக்கியம் பெற்றதோ இதே போன்று அவனது வாழ்க்கையில், எண்ணும் எழுத்தும் மிக இன்றி யமையாதவையாகும்.

இவ்விரண்டையும் மாணவர் எடுத்துக் கொள்ளும் வகையில் இலகு படுத்தி கற்பிக்கும் வல்லமை மிக்கவராக முருகேசு அவர்கள் விளங்கினார். இவ்விரண்டு பாடங்களையும் போதிப்பதற்கு ஆசிரியப் பெருந்தகைகள் பின்னடிக்கின்ற இக்காலத்தில் அதிபர் பணியுடன் இரண்டு பாடங்களையும் மாணவர்களுக்கு ஊட்டி அப்பாடங்களில் மாணவர் உயர்ந்த அடைவு மட்டத்தினை அடைவதற்கு இறுதிக்காலம் வரை உழைத்த ஓர் உத்தமன் என்பதை கல்வி உலகம் மறக்காது

"**இதனை இதனால் இவன் முடிப்பதென்றாங்கு**
**அதனை இவன் கண் விடல்**" என்றார் வள்ளுவர்

இக்குறளுக்கேற்ப தன் ஆற்றலை மாணவர் சமூகத்திற்கு அற்பணித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகான் அமரர் அருளம்பலம் என்றால் மிகையில்லை பாடசாலை நேரத்திலும், விடுமுறை நாட்களிலும் மாணவர்களை அழைத்து கற்பித்தல் செய்தவர். இத்தகைய ஒருவரின் இழப்பு மாணவ சமூகத்திற்கு பேரிழப்பாகவே இருக்கும்.

இவருடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு 1988 களின் பின்னர் எனக் கேற்பட்டது. இக் காலப்பகுதியில் நான் சொறிக்கல்முனை ஹொலி குறொஸ் வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றிய காலம் எங்களிடையே நெருக்கம் அதிகரித்தது. சந்திக்கும் சந்தர்ப்பங்களில் இப்பகுதி தமிழ் மாணவர்களின் பின்தங்கிய கல்வி நிலை பற்றியும் அபிவிருத்திக்கான வழி வகைகள் குறித்தும் ஆராய்வோம். அது தொடர்பான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டோம்.

1990 - 1993 வரையான காலப்பகுதியில் நாட்டில் கூர்மையடைந்த வன்செயல், இனமுரண்பாடுகள் மோதல்களினால் முழுக் கிராமமுமே அகதிகளாக்கப்பட்டு, மீளக்குடியமர்ந்த பின் பாடசாலை பாதுகாப்புப் படையின் காவலரணாக மாற்றப்பட்டவேளை புதிய பாடசாலைக் கட்டிடங்களை அமைத்து பாடசாலையை நடாத்துவதில் அமரர் இராஜேந்திரா அவர்கட்கு பக்கதுணையாக நின்று செயற்பட்டார். கல்விப் பணியுடன் தன் சேவையினை மட்டுப்படுத்தாது இனங்களுக்கிடையிலான நல்லுறவினை வளர்ப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் முஸ்லிம் தமிழ் மக்களிடையில் இணைப்புச் சக்தியாக விளங்கினார்.

"சீர்பாததேவி சிறுவர் இல்லமொன்றை அமைத்து ஆதரவற்ற அனாதைகளான சிறுவர்கட்கு அபயமளித்து அவர்களின் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்து இல்லத்தின் முகாமைத்துவக் குழுவில் உறுப்பினராக இறுதிக் காலம் வரை பணியாற்றினார். சிறுவர் இல்லத்தை அமைத்து நடாத்துவதில் தொடக்கத்தில் பல்வேறு சவால்களை எதிர் கொண்ட போதும் அவற்றை தனது அனுபவ முதிர்ச்சியினூடாக வெற்றி கொண்டு இல்லத்தின் வினைத்திறன் கொண்ட வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உழைத்த மகான் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பொதுப் பணிகளில் ஈடுபாடு கொண்டாலும் சமயப் பணியிலும் முன்னின்றார். வீரமுனை கண்ணகி அம்மன் ஆலயத்தின் தர்மகர்த்தா பணியை ஏற்று அவ்வாலயத்தின் உற்சவ நிகழ்வை சிறப்புற நடாத்தி கிராம மக்களின் மதிப்பையும் மரியாதையும் பெற்றவர் என்பதை ஊர் மக்கள் வாயிலாக அறிந்து கொண்டேன். திருவெம்பாவை, கந்தசஷ்டி விரதகாலங்களில் கந்தப் புராணம் பக்திப் பரவசத்தோடு பாடும் தன்மையினை ஊர்மக்கள் மனங்களில் தனியான இடத்தைப் பெற்ற ஒருவராக விளங்கினார்.

இத்தகைய ஆற்றல்களை தன்னகத்தே கொண்ட அமரர் முருகேசு எனும் அருளம்பலம் அவர்கள் பார்ப்பதற்கும் பழகுவதற்கும் எளிமையானவராக, தன்னடக்கம், சுயநம்பிக்கை, நல்லொழுக்கம் நீதி, நேர்மை, நேரம் தவறாமை, புதியன தேடல், சுய மதிப்பீடு என்பன இவரிடம் நான் கண்ட தலைமைத்துவ பண்புகள்.

இவ்வகையில் தன்னை உருவாக்கி வளம் கொடுத்த மண்ணிற்கும் எதிர்கால இளம் சந்ததியினருக்கும் தன்வாழ் நாளை அர்ப்பணித்து சேவகம் செய்து அமரத்துவம் அடைந்த நண்பர் அருளம்பலம் அவர்களது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மற்றும் அன்னாரது சொந்தக்காரருக்கும் எனது எமது ஆழ்ந்த அனுதாபங்கள்,

**"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை எனும்,**
**பெருமை உடைத் திவ்வுலகு"** - வள்ளுவர் -

**பொன். செல்வநாயகம்**
**ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**அகில இலங்கை சமாதான நீதிவான்,**
**பிரசித்த நொத்தாரிஸ்**
**பாண்டிருப்பு :02**
19.04.2009


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயகோ அந்த அறிவு நிறைந்த ஆலோசகர் எங்கே!- - - - -

வரலாற்று சிறப்பு மிக்க வீரமுனை ஸ்ரீ சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தினால் நிர்மானிக்கப்பட்டு இயங்கி வரும் வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லம் ஆதரவற்ற சிறார்களை அரவணைத்து அன்புகாட்டி கல்வி புகட்டி வருவதற்கு ஆலோசகராக இருந்த அமரர் அருளம்பலம் அதிபரை இழந்து தவிக்கிறது.

இல்லத்தின் திறப்பு விழா திகதியை முன்மொழிந்து அதனை முன்னின்று நடத்தியவர்களில் ஒருவர் அமரர் அருளம்பலம் அதிபர் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

அமரர் அருளம்பலம் அதிபர் அவர்கள் மேற்படி இல்லத்தில் ஆரம்பகாலம் முதல் அவரது இறுதி நாள்வரை இணைந்து செயற்பட்டு வந்தார். இல்லத்தில் நடைபெற்ற விழாக்களில், அவர் இல்லாத விழா இல்லை அவர் இந்த நிகழ்வுகளில் பேசிய பேச்சுக்கள் இன்றும் எங்கள் காதுகளில் எதிரொலிக்கிறது.

அன்னாரது அறிவு முதிர்ந்த ஆலோசனைகள் இல்லத்தின் தற்போதய வளர்ச்சிக்கு பெரிதும் உந்துதலாக இருந்து வந்தது. அவரது நகைச்சுவை குறும்பும் பேச்சும், அணுகுமுறையும் எங்களது மனதில் இன்னும் நிழலாடுகிறது. அன்னாரது சேவையால், ஆலோசனையால் பயனுற்று வளர்ச்சி கண்டிருக்கும் இந்த இல்லத்தில் கல்விபயிலும் அனைத்து சிறுவர்களது முன்னேற்றத்திலும் அவரது சேவை பதிந்துள்ளது.

அவரது உயரிய சேவை தொடர்ந்தும் எங்களுக்கு கிடைக்காது இறைவன் அவரது மண்ணுலக வாழ்வை நிறைவு செய்து விண்ணுலகிற்கு அவசரமாக அழைத்தது இல்லத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக அனைவரது மனதிலும் ஆழமாக பதிந்துவிட்டது. அன்னாரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

திரு. த. விநாயகமூர்த்தி (பொறியியலாளர்)
பணிப்பாளர்
சீர்பாததேவி சிறுவர் இல்லம்
வீரமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனடி சேர்ந்த எம் இனிய அன்பர் திருவாளர் எஸ். அருளம்பலம் அதிபர், மத்தியஸ்த சபை உறுப்பினர் அவர்களுக்கு

# இரங்கற்பா

முருகேஸ் என்று முளைத்திருந்த நீ
அரு எம்பலமாக ஆல விருட்சமாய் ஆனாய்,
கணிதத்தில் உன்திறமை கணக்கக் கதைப்பார்கள்
கலைப் பட்டதாரியாகி கலக்கிட்டாய், இனிக் காணோம் உன்னை.

திலகவதி யார்?
உமாமகேசன் உமாபிரயா யோகேந்திரா ரம்மியா
உங்கள் திலகங்கள் வதி பவர்கள்.
அபிஷேகன் உங்கள் அடுத்த தலைமுறை.
அத்தனைபேரும் உங்கள் உதிர்த் துறவுகள்
உறவுகள் தவிக்க உயர நீ போனாய்.

அறுபதை நோக்கி அரைவருடம் இருக்க இன்னுமொரு
கருவறை நோக்கி காலன் கணக்கெடுத்தான் உன்
வெற்றிடம் நிரப்ப வீரமுனை என்ன செய்யும்? உனது
வெற்றுடல் அக்கினி சங்கமம், விம்மியது வீரமுனை.

ஆர்கேஎம் அதிபராய் அளப்பரிய சேவை
சமூகப் பணியிலும் சளைக்கவில்லை நீ
சீர்பாததேவி சிறுவரில்லம் சிறக்கப் பாடுபட்டாய்
ஆர்யிதைச் செய்வார் அலறுதே உன் சமூகம்.

பிராதன மத்தியஸ்தர் நீர் பிரமாதம் உன் மத்தியஸ்தம்
அரிதான பிணக்குகளை அழகாகத் தீர்த்து வைத்தாய்
கணமாக காரசாரமாகக் கதைத்தவர்கள்
குணமாக கலந்து கூடிச்செல்ல வைத்தாய்
இணக்கசபையொன்று இன்னுமொரு பெயர்
நினைக்க நினைக்க உன் இழப்பு இணைக்க முடியவில்லை.

இனநல உறவில் இணங்கிச் செல்லும் இனியவர் உன்
குணநல மோங்கட்டும், குன்றத்துத் தீபமாய் ஒளிரட்டும்.
சமூகங்கள் சகஜமாய் சகவாழ்வாகட்டும்
சாந்தி சாந்தி உம்மீது எந்தியேந்தி நிலைக்கட்டும்.

**அல். ஹாஜ். எஸ். அப்துல் றாஸீக் ஜே. பீ,**
(ஓய்வுபெற்ற அதிபர்)

தவிசாளர் - மத்தியஸ்த சபை, சம்மாந்துறை

உங்கள் பிரிவு உறவினர் உற்றார் மற்றவர் ஆறுதலளிக்க மத்தியஸ்த சபை,
சம்மாந்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் பஸீல் காரியப்பர் ரசிகர் வட்டம் - ஸ்ரீ லங்கா
පාවලර් ෆසීල් කාරියප්පර් රසිකර් වට්ටම් . ශ්‍රී ලංකා
PAVALAR FAZEEL KARIAPPER RASIKAR VATTAM - SRI LANKA
Regd. No: NEP / ED / CUL / AM / SAM / 03 / 2006    Ampara Road, Sammanthurai. 32200

Date : 16.04.2009

# முஸ்லிம் சமூகத்துடன் பிணைந்திருந்த மானிடபுருஷர் அமரர் அருளம்பலம் (அதிபர்)

வீரமுனை மணப்பதியின் அவாதர புருசர்களில் அமரர்.சி.அருளம்பலம் (அதிபர்) சிறந்த பண்பாளராக விளங்கியவர். சீர்பாததேவியின் அரச குலகோட்டமாக விளங்கிய புண்ணிய பூமியாக வரலாற்று எழுச்சி மிகு வீரமுனை பதியின் கௌரவம்காத்த மானிட புத்திஜீவி. இவரின் வாழ்நாளில் வீரமுனை வரலாறும், சீபாதர் சமூகத்தின் வரலாறும் ஆவணமாக்கப்பட வேண்டும் என பல்வேறுபட்ட முனைப்புகளினை காட்டிய உத்தமர். இவர் இனம்-மதம் வேறுபாடு பாராமல் பழகும் பண்பாளர். முஸ்லிம் சமூகத்தாருடன் ஒன்றித்து வாழ்ந்த நண்பர். இவர்களின் இன்பதுன்ப நிகழ்வுகளில் பங்குகொள்ளும் தன்மையுள்ளவர். சம்மாந்துறைப் பிரதேச மத்தியஸ்தர் சபையின் கௌரவ பிரதிநிதியாக இருந்து செல்வாக்கு நிறைந்த பெரிய முஸ்லிம் குடும்பங்களின் பிரச்சினைகளினை மிக சாதுரியமாகவும், இரகசியம் பேணியும் தீர்த்து வைத்த புத்திசாலி.

இவரின் வாழ்நாளில் கல்விக்காய் தனது ஆத்மாவினை பல கோணல் களில் அலையவிட்டு கல்விச் சொத்துக்களினை தன்பதியில் ஒன்றுகுவிக்க பாடுபட்ட கல்வியாளர். பாடசாலைக்கல்வி சார்புறக்கிருத்திய செயற்பாடுகளில் அதித ஈடுபாடு செலுத்தி திருப்தியும் கண்ட இன்பாளர் அமரர்.அருளம்பலம் (அதிபர்) என்றால் மிகையில்லை.

தான் கலை -இலக்கிய அமைப்புக்களில் அங்கம் வகித்து தனது பங்களிப்புக்களினை செய்தவர். இந்த வகையில் எமது பாவலர் பஸீல் காரியப்பர் ரசிகர் வட்டம் - ஸ்ரீலங்கா அமைப்பின் கௌரவ பிரதிநிதியாக இருந்து இறுதிவரை செயற்பட்டவர். இதுபோன்று சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் இணைச் செயலாளராகவும், சம்மாந்துறை பிரதேச கலாசார பேரவையின் இணைத்தலைவராகவும் இருந்து தன்னாலான பங்களிப்பினை வழங்கி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நல்லதொரு கல்விமானை, பண்பாளரை, புத்திசாலியை, நண்பனை இழந்து சம்மாந்துறை சமூகம் தவிக்கின்றது. அமரர்.சி.அருளம்பலம் (அதிபர்) அவர்களினால் விடப்பட்ட இடைவெளியை மிக விரைவில் வீரமுனை பதிமகன்கள் நிரப்பி எம்மிருசமூகத்தாரின் நட்புறவில் இறுக்கம் கண்டு-சமாதான முன்னெடுப்புக்களில் பங்குகொள்ள இந்த இரங்கல் மலரின் மூலமாக பகிரங்க வேண்டுதலை கோருகிறோம். அமரர்.சி.அருளம்பலம் அவர்களின் ஆத்மா விமோசனம் பெறவேண்டும்.

: நன்றி :

M.I. MOOSA

கலைஞர் எம்.ஐ. மூஸா
பொதுச் செயலாளர்
M.I. MOOSA
General Secretary

வரலாற்று ஆய்வாளர் ஜலீல் ஜீ
ஸ்தாபகத் தலைவர்
JALEEL JEE
Founder President


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தவர் இறப்பது நியதி
பெருமை சேர் செயல்களே எமக்கென்றும் உறுதி
மறந்தும் கூட பிழை செய்யா மனிதர்
மறைத்திடும் போது மனமிங்கு நோவே
அறம் கொட்டும் சேவை
அவரென்றால் பேசும்
மறம் கட்டியாளும் அவர்மனம் விட்டு நோவோம்

அருமை சேர் மனைவியோ திலகவதி
அவர் ஈன்றபிள்ளைகளோ
உமாமகேஸன், உமாபிரபா
யோகேந்திரா, றம்மியா
பெருமை சேர் பிள்ளைகளோடு
பிறழாத பேரப் பிள்ளையும்
நிறைவோடு கண்டிங்கு
குறைவின்றி வாழ்ந்தீரே

ஆர்.கே.எம். பாடசாலை அதிபராய், ஆசிரியராய்
அரும்பணிகள் பலபுரிந்தாய்
சீர் பெற்று விளங்கும் சிந்தாயாத்திரையானுக்கு
தினம் தினம் திருத்தொண்டு பல புரிந்தாய்
பார்போற்றும் கண்ணகிக்கு பல விழாக்கள் நீ எடுத்து
பாமாலை பல சூழ திருக்குளிர்த்தி பாடி மகிழ்வித்தாய்
ஊருக்குள் சிரேஷ்டனாய் உத்தமனாய் வாழ்க்கையிலே!
நோய் எனும் வடிவில் வந்து காலம் உனைக் கவர்ந்திட்டான்

உன்பிரிவில் துடிதுடிக்கும் உன்மனைவி உன்மக்கள் உற்றார் உறவினர்களின் துயரத்தில் பங்கேற்று முற்றத்து மல்லிகையாய் உனை முகராத மனங்களுக்கும் நாட்கள் சில செல்கையிலே நாமுணர்வோம் எனக்கூறி விலைமாறும் பொருள் மாறாப் போல விலகாது உன் ஆத்மா இறையடி சேர நிலையான இடம் தேடி நின் ஆத்மா இறையடிசேர நிறைவான இறைவனை அனுதினமும் வேண்டுகிறேன்.

- நன்றி -

K. பொன்னம்பலம்
நிருவாக உத்தியோகத்தர் (கிராம சேவை)
பிரதேச செயலகம்
நாவிதன் வெளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இனிய நண்பர்,

சீர்பாதகுலத்தின் தாய்க்கிராமம் மட்டுவாவியின் தென்புறத்தே அமைந்துள்ள வீரமுனைப் பதியில் அளப்பெரிய சேவைகளைச் செய்து இறைபதம் அடைந்த எனது இனிய நண்பரும் உடன்பிறவா சகோதரருமான சின்னவர் அருளம்பலம் (முருகேசு) அவர்களின் மனைவி மக்கள், உற்றார் உறவினர் அனைவருக்கும் முதலில் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுக்கு ஆறுதலையும் அமைதியையும் அருள எல்லாம் வல்ல சிந்தாயாத்திரைப் பிள்ளையாரை வேண்டுகிறேன்.

மனித வாழ்க்கையானது தாமரை இலைதண்ணீர் போல் நிலையற்றது. பிறந்த அன்றே மரணமும் நிச்சயமாகிவிடுகிறது. அந்தவகையில் நாம்ஒவ்வொருவரும் இறப்பது நிச்சயம். ஆனால் எப்போது என்பதுதான் தெரியாது. அந்தவகையில் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எம்மைவிட்டகன்ற அமரர் மருகேசு வீரமுனைக் கிராமத்தில் சில நிலையான சேவையினை ஆற்றிவிட்டு சென்றிருக்கிறார் என்றால் அது மிகையாகாது.

ஆசிரியராய், பிரதி அதிபராய், அதிபராய், சித்தாயாத்திரைப் பிள்ளையார், கண்ணகி அம்மன் ஆலயங்களின் தர்மகத்தாவாக, சீர்பாததேவி இல்லத்தின் தலைவராக நம்பிக்கையாளர் சபையின் அங்கத்தவராக அவர் இருந்து அவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காது. கிராமத்தின் வளர்ச்சியில் கல்வியும் கலாசாரமும் முக்கிய விடயங்களாகும். இத்துறையில் அவர் அளப்பெரும்சேவை செய்துள்ளார். குறிப்பாக நாங்கள் ஒன்று சேரும்போது பாடசாலையின் தேவைகள், கல்வி பற்றியும், ஆலயத்தின் திருப்பணிகள், பூசைகள் பற்றியே உரையாடிக்கொள்வோம், கல்வியில் காலம் நேரம் பாராது கடமையாற்றினார் என்று தான் கூறுவேன். அவர் ஊரில் வசித்தமை அதற்கு வசதியாக இருந்தது. ஆசிரியராக இருக்கும்போது மட்டுமன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராய் இருக்கும்போது கூட பணத்திற்காக வகுப்புக்கள் நடத்துகின்ற காலகட்டத்தில் எமது ஊர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இலவச வகுப்புக்களை தொடர்ச்சியாக நடத்தியமை அவர் ஊரின் மீதும் ஊர்மக்கள் மீதும் கொண்ட பற்றேயாகும். எல்லாவற்றிற்குமேலாக அவரிடம் இறைபக்தி நிறைய இருந்தது. கோயில் பூசை விடயங்களில் எமது பழைய மரபுகளை மாற்றாது பேணவேண்டும் என்பதில் எவ்வளவு கவனமாக இருந்தார் என்பது பிள்ளையார், கண்ணகி அம்மன் ஆலய பூசைகளில் தவறாது கலந்துகொள்வதில் நாம் தெரிந்து கொள்ளலாம். கண்ணகியம்மன் ஆலய சடங்குகளில் அளப்பெரிய பங்களிப்பினை செய்துள்ளார்.

கிராமத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக பலர் வெளியூர்களில் சென்று வசித்தபோதும் தான் மீண்டும் ஊரிலேயே வசித்து கிராமத்தின் தலைவனாகவும் விளங்கினார் குறிப்பாக அவர் சொந்த விடயத்திலும் பார்க்க பாடசாலை, கோயில் இரண்டிலும் கூடுதலான கவனத்தைச் செலுத்தினார், என்பது ஊர்மக்களுக்குத் தெரிந்த விடயமாகும்.

அது மட்டுமன்றி அன்னார் குடும்பத்தின் குலவிளக்காவும் மனைவிக்கு நல்லகணவனாகவும் மக்களுக்கு பாசமுள்ள தந்தையாகவும், சுற்றத்தாருக்கு நல்லுறவினராகவும், அன்பர்களுக்கு நல்ல தோழனாகவும் இருந்த இவரை காலன் சடுதியாக அழைத்தது, அவரது குடும்பத்திற்கென்ன கிராமத்து மக்கள் எல்லோருக்குமே தாங்க முடியாத இழப்பாகும். இது இயற்கையின் நியதி. ஆனால் அவர் அளப்பரிய இறைபணி செய்தார். இறைபதம் அடைந்து விட்டார். ஆயினும் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

**மு. விநாயகமூர்த்தி**
**உதவி பணிப்பாளர்,**
**மட்டக்களப்பு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரும் பணியாற்றிய அருளம்பலம்

அமரத்துவம் அடைந்த உயர் திருவாளர் அருளம்பலம் அவர்கள் எனது நெருங்கிய உறவினர். உடன் பிறவாச் சகோதரர். அவரது பிரிவுச் செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தேன். துரதிஷ்டவசமாக இறுதிக்கிரியைகளில் கூடக் கலந்து கொள்ளக் கிடைக்கவில்லை. அத்துயரச் செய்தி காலங்கடந்து பல நாட்களின் பின்னரே என் செவிக்கு எட்டியது. அவர் எங்கள் குடும்பத்தவரோடு மிகவும் நெருக்கமாகப் பழகிப் பழைய உறவைப் பேணிவந்தவர். எனது பிள்ளைகள் மத்தியில் அவருக்கு அளவிறந்த மதிப்பும் மரியாதையும் இருந்து வந்தது. அவர்கள் அவரை அன்போடும் பாசத்தோடும் "**சீனியப்பா**" என்றே அழைப்பார்கள். உண்மையில் தம்பியின் பிரிவு எங்கள் எல்லோரதும் மனதை வெகுவாக வாட்டி வருத்துகின்றது.

எனது இனிய இளவல் அருளம்பலம் அவர்களின் இளமைக்கால நிகழ்வுகளை நான் இங்கு மீட்டிப் பார்க்கின்றேன். சுறுசுறுப்பும் உற்சாகமும் இவரது இயல்பான குணசீலங்களாம். பாடசாலையில் கற்கும் காலத்தில் கல்வியில் மிகுந்த ஈடுபாடும் விடா முயற்சியும் உடையவராக விளங்கினார். பல சந்தர்ப்பங்களில் நான் இவரது ஆற்றலையும் திறமையையும் கண்டு வியந்து தட்டிக் கொடுத்தும் உற்சாகப்படுத்தியும் உள்ளேன். அவ்வப்போது பெற்றோரிடத்தும் அவரது நுண்மதியை எடுத்துக் கூறி அவர்களையும் மகிழ்வித்திருக்கின்றேன். இந்த நினைவுகள் இன்றும் எனது உள்ளத்தில் பசுமையாகவே உள்ளன.

தம்பி அருளம்பலம் அவர்கள் உயர் கல்வியில் எதிர்பார்த்திருந்த துறைவேறு ஆனால் அது வேறு விதமாகப் போகத் தற்செயலாகவே ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டார். ஆயினும் தாம் மேற்கொண்ட ஆசிரியப் பணியில் அர்ப்பண சிந்தனையோடு தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். நல்லாசானாகத் திகழ்ந்து மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் ஆகிய அனைத்துத் துறைகளினராலும் பாராட்டைப் பெற்றார். இவரது பொதுத் தேர்வுகளிலும், ஏனைய பிறபரீட்சைகளிலும் தோற்றிய மாணவர்கள், சிறப்புச் சித்திகளைப் பெற்று, பாடசாலைக்கு நற்பெயரை ஈட்டித் தந்துள்ளனர் எனப் பலர் கூறுவர். மாணவரின் கல்வி வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தி அல்லும் பகலும் அயராது உழைத்தார். பிற்போக்கான மாணவரின் நலன் கருதிப் பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தி அவர்களை ஊக்குவித்தார். தாம் நோயுற்றிருந்த காலத்திலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வருத்தம் பாராது பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தி உள்ளார். என்றால் அவரது சேவைத்திறனையும், கடமை உணர்வையும் கூற வார்த்தைகளே இல்லை எனலாம்.

அமரர்.அருளம்பலம் அவர்கள் ஓர் ஆன்மீகவாதி, தெய்வநம்பிக்கையும், கடவுள் பக்தியும் மிக்கவர். வீரமுனையில் கோயில் கொண்டு எழுந்தருள் பாலிக்கும் சிந்தாத்திரைப் பிள்ளையார் மீது ஆராத அன்பும் மாறாத பக்தியும் கொண்டவர். பாடசலைக்குச் செல்லு முன்னே எம் பெருமான் சிந்தாத்திரைப் பிள்ளையாரின் திருவடிகளைத் தொழுது அவரது ஆசியும் அனுமதியும் பெற்றே தம் கடமையைத் தொடர்வார் சிந்தாயாத்திரைப்பிள்ளையார் ஆலயத்தில் நிகழும் விழா, விரதம் பண்டிகை ஆகிய விசேட காலங்களில் புராணபடனம், சமயச் சொற்பொழிகள் என்பனவற்றைத் தவறாது செய்வார். சிந்தாயாத்திரைப் பிள்ளையார் சேவடி பரவும் பக்தர்களுக்கு அன்னாரின் பிரிவு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

இறுதியாகத் தம்பியின் மனைவி மக்கட்கு நான் கூறுவது இதுதான். என் செய்யலாம்? யாவும் விதியின் செயலேயாம். பிறப்பு, இறப்பு, தோற்றம் - மறைவு அனைத்தும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட வையாகும். அதுதான் நியதி ஊழ்வினை என்பனவெல்லாம். அதனை ஒருவராலும் ஒழிக்கவோ, மாற்றவோ இயலாது. அது மிக மிக வலிமை மிக்கது. இத்தகைய ஊழ்வினையை மாற்றுவதற்கு நாம் மேற்கொள்ளும் உபாயத்தாலேயே அவ்வினை முந்தி நிற்கும்.

**"ஊழின் பெருவலியாவுள மற்று ஒன்று**
**சூழினும் தான் முந்துறும்"** என்பது திருக்குறள்

**"வினைப்பயனை வெல்ல வேதம் முதலாய அனைத்தாய**
**நூல்களிலும் உபாயமில்லை"**

**"ஆறிலும் சாவு, நூறிலும் சாவு"** என்பவற்றை எல்லாம் அறிந்த நாம் அவர் பிரிவு குறித்து வருந்துவதால் பயனில்லை. அவர் ஆத்மா நற்கதியடைய எல்லாம் வல்ல பரம் பொருளைப் பிரார்த்திப்போம்.

**வாழ்க அருளம்பலம் எனும் நாமம்!**
**வளர்க அவர் புகழ்!!**

**வி. எஸ். வேலாயுதன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமுனை தாயவள் தழுவித் தாலாட்டிய தன் மகன் தன்னை தழுவி தாலாட்டிய பெருமை கொண்டவர் அமரர் அருளம்பலம் ஐயா அவர்கள் வீரமுனை மண்ணின் கலங்கரை விளக்காக ஒளி வீசி அணைந்து இருளில் மூழ்கி கிடக்கும் இவ் வீரமுனை ஊரில் உம்மைப் போல் ஓர் மா மனிதன் கிடைக்குமோ ஐயா.

ஒவ்வொரு மனிதனும் இறைவனின் பிரதிநிதி மனிதன் அறநெறியில் தன் வாழ்வை அமைத்துக் கொள்ளும் பொழுது அவனின் சிறப்பு பண்புகள் வெளியாகின்றன. சடங்குகளாலும் அர்சனைகளாலும் ஆண்டவனை அடைய முடியாது அன்புள்ளங்களின் அரும்பணியுமே அறநெறியின் விம்பம் என்பதை எமக்கு காட்டி சென்றவர் எங்கள் அருளம்பலம் ஐயா என்றால் மிகையாகாது இவரின் இழப்பு என்பது இவ் ஊரில் ஈடு செய்யமுடியாத ஒன்றாகும்.

அமரர் அருளம்பலம் ஐயாவின் கீழ் பதினேழு வருடங்கள் ஆசிரியராக பணியாற்றிய பெருமை எமை சாரும் அதிபர்களுக்கு எல்லாம் அதிபராக திகழ்ந்தவர். இவருடைய அயராத ஆற்றல்களை இன்று என் நினைவில் கொள்ளும் போது எம் நெஞ்சம் நெகிழ்கின்றது. பாடசாலையின் கடமைகளை கட்டொழுங்கு மாறாமல் காத்து இப் பிரதேசத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளுள் முதல் தரப் பாடசாலையாக மகுடம் சூட்டிய பெருமை உமையே சாரும். அதிபர் ஆசிரியர் என ஓர் பேதமை இல்லாமல் எல்லோரும் ஒன்று பட்டு உழைத்தால் எதனையும் வெல்ல முடியும் என்பதற்கு உமது செயல் ஓர் எடுத்துக் காட்டாக அமையும்

ஐயா அருளம்பலம் அவர்களின் அதிபர் பணியின் போது தம்மை நம்பிய இளம், மாணவசெல்வங்களுக்கு எவ்வகையிலும் குறை வில்லாமல் எல்லா வழிகளிலும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் செய்து இம் மாணவர்களின் உயர்வுக்கு வழியமைத்த பெரும் தலைவர் நீயே. உன் காலப்பகுதியில் மருத்துவர்களையும் பொறியியளாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் பற்பல கல்வி மான்களையும் உருவாக்கிய பெருமை உமையே சாரும், அது மட்டுமல்லாமல் உம் அதிபர் காலத்திலேயே இப் பாடசாலையில் 5ம் ஆண்டு புலமைபரிட்சையில் அதிக மாணவர்கள் தேர்ச்சி பெற்றார்கள் என்னும் பெருமை உமை சாரும்.

வீரமுனையில் நடை பெறும் எந்த விழாவிலும் நீங்கள் தானே கதா நாயகனாக திகழ்வீர்கள். இவ்விடத்தை இனி யாரால் ஈடு செய்யமுடியும் உமது சொல் வல்லமை யார்தான் அறியார் பொதிகை தழிழை தன் பொக்குசமாக கொண்டு சூழ் உரைக்கும் வல்லமை உமையே சாரும் ஆலய நிகழ்வுகளில், கந்தபுராணம் பிள்ளையார் கதை, பஞ்சபுராணம், சிலப்பதிகார உரை திருக்குழுர்த்தி என்பவற்றை பண்ணோடு பாடும் வல்லமை உமையேசாரும் இத்தனை சிறப்புக்களும் ஒருங்காக அமைந்த பெரும் தலைவனை இழந்து தவியாக தவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனின் பாதகமலங்களை இறஞ்சுகின்றோம்.

திரு. க. கருணாகரன் (ஆசிரியர்)
ஆசிரியர்குழு
சார்பில்

முதலில் ரூபமும், நாமமும் அவசியம். அதற்காகத்தான் அவதாரங்கள் நிகழ்கின்றன. அதன் மூலம்தான் கடவுளைக் கண்டு, அன்பு செலுத்தி, மதித்து, மகிழ்ந்து, பொக்கிஷமாகப் பாதுகாத்து, கேட்டு, அவர் சொல்படி நடந்து கடைசியில் அவருக்குப் பெயருமில்லை, உருவமுமில்லை என்று உணர முடியும்.

- பாபா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகிலே பிறக்கும் அனேகர் தங்களுக்காகவும், தங்கள் குடும்பத்தினருக்காகவும் வாழ்ந்து கொண்டிருக்கையில் மிகச் சிலரே மற்றவர்களுக்காகவும் தியாக உணர்வோடு வாழுகின்றனர். அந்த வகையிலே மறைந்த அதிபர். சி. அருளம்பலம் அவர்கள் தனது குடும்பத்திற்காக மாத்திரம் வாழ்ந்தவரல்ல எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்காகவும் பல விடயங்களை முன்னெடுத்துச் செல்ல அயராது முன்னின்று உழைத்தவர்.

அந்த வகையிலே எமது வீரமுனை கிராமத்தின் இரு கண்களாக விளங்குவது ஆலயமும், பாடசாலையுமாகும். இந்த இரு சமூக நிறுவனங்களையும் கட்டிக் காத்து அவற்றின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர் களில் குறிப்பிடத்தக்கவர்களில் இவரும் ஒருவராவார்.

பாடசாலையைப் பொறுத்தவரையில் இவர் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக சீரான படிமுறைகளில் தனது தரத்தினையும் பாடசாலையின் முன்னேற்றத்திலும் பாடுபட்டார். பெரும்பாலான பாடசாலைகளிலே அதிபர்களுக்கு ஒரு நேரசூசி இருக்கும் அது அவர்களுக்கு மாத்திரமே தெரிந்திருக்கும். ஆனால் எங்களது அதிபர் அருளம்பலம் அவர்களைப் பொறுத்தவரையில் அவருடைய நேரசூசி மேல்வகுப்பு மாணவர்கள் அனைவருக்குமே தெரிந்திருக்கும். ஏனென்றால் கணிதம், தமிழ் ஆகிய இரு பாடங்களையும் அவ்வளவு சுவாரிசியமாக கற்பிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தவர். அதிலும் குறிப்பாக தமிழ் இலக்கியப் பகுதியை கற்பிக்கத் தொடங்கிவிட்டால் நேரம் போவது தெரியாமல் மாணவர்கள் மெய்மறந்து அப்படியே இரசித்துக் கொண்டேயிருப்பார்கள். நகைச்சுவைகளும், கவிதைநயப் பேச்சுக் களுக்கும் பஞ்சமே இருக்காது. நானும் அவருடைய மாணவனாக சாதாரண தரம், உயர் தரங்களில் இப்பாடங்களைக் கற்று சித்தியடைந்தவன் என்ற வகையிலே இக்கருத்துக்களை முன்வைக்கிறேன்.

பாடசாலையின் அனேகமான விழாக்கள், நிகழ்வுகளில் பழைய மாணவர்களையும் இணைத்துக் கொண்டு பாடசாலையின் வெற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைக்கு உழைத்தார். தனது வெற்றி நடையின் குறுக்கே வருகின்ற தடைகளையும் தாண்டி, சவால்களையும் சமாளித்து வெற்றி கண்டார்.

**விதியை வெல்ல மதியால் முடியும்,**
**உண்மையாக இருக்கலாம்,**
**மதியும் மழுங்கிப் போய் விட்டால்**
**எம்மை அணைப்பது யார்?**
**படைத்தவனுக்கு இவையெல்லாம்**
**பொழுது போக்கான விளையாட்டு**
**உயிர்களைப் படைத்து**
**அவற்றை பாசத்தால் பிணைத்து**
**பற்றுடனே அணைக்கின்றான்**
**எதைக் கொண்டு வந்தோம் அதை நாம் இழப்பதற்கு!**
**ஜனனம் உண்டெனில் மரணமும் உண்டே!**
**கீதையில் கண்ணன் சொல்கின்றான்**
**அனைத்தும் அவன் செயலே......**

எனவே எங்களின் பெரும் மதிப்புக்கும், அன்புக்குமுரிய அதிபர் அருளம்பலம் ஐயா அவர்களின் உடல் தான் மறைந்துள்ளது. அவருடைய உணர்வுகளை மதித்து அவரின் பெயர் சொல்ல அவரால் உருவாக்கப்பட்ட ஒரு மாணவர் சமூகம் உண்டு. நிச்சயம் அவருடைய பெயரும், பணியும் அழியாது நிலைத்திருக்கும்.

அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள அவரின் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தார், உறவினர்கள், நண்பர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை பழைய மாணவர்கள் சார்பாக தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா இறைபதம் எய்தி முத்தியடையவும் இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

பூ. பரமதயாளன் ஆசிரியர்
வீரமுனை
பழைய மாணவர்கள் சார்பில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் மதிக்கும் ஒரு பண்பாளர்

## அருளம்பலம்

"சாகும் போதும் சத்தியமாய்ச் சொல்கிறேன் சங்கத்தமிழை ஓதிஉடல் : ஏகும் போது என்னுயிர் பலவாகி எங்கும் தமிழை எறியாதோ!"

இந்த எனது கவிதை அடிகளை அவ்வப்போது நான் மீட்டுகின்றபோது அன்புக்குரிய அமரர் அருளம்பலம் அவர்களுக்குள் ஒளிர்கின்ற இதமான அவரது தமிழ்ப் பற்றுதான் முதலில் மகிழும் எனது இதயத்தில். ஆயபல மொழிகளையும் படிக்கலாம் தமிழைத் தலை குனியத்தட்டித் தாரைவார்ப்பதை ஜீரணிக்காத என்னைப் போல் ஒருவராகவே இலங்கினார் அருளம்பலம் அவர்களும்.

இவ்வாறு தமிழ் மொழியில் இருந்த தணியாத பற்றுப்போல் - இவர் தனது இந்துசைவ மதத்திலும் சாலவும் பக்தி மிக்கவராக இலங்கினார். சித்தன்மைத்தான இவரது மனப்பாங்கை உணர்ந்த வீரமுனை மக்கள் - இவரைக் கண்ணகை அம்மன் ஆலயத்தின் தலைவராகவும், இந்துமா மன்றத்தின் தலைவராகவும், ஸ்ரீ சிந்தா யாத்திரைப்பிள்ளையார் ஆலயத்தின் கணக்காய்வாளராகவும், இருந்து மரணம் வரை இவரது சேவைகளின் மூலம் பல பயன்களையும் பெற்றுக் கொண்டு இலங்கினார்.

இவர் ஒரு பட்டதாரியாக இருந்தும் இன்னும் இன்னும் தனது கல்வி அறிவுகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதிலும் ஆதங்கம் மிக்கவராக இருந்தார். கல்வி அறிவைக் கற்றுக் கொள்வதிலும், கற்ற கல்வி அறிவினைக் கற்றுக் கொடுத்து வாரிசுகளை உருவாக்குவதிலும் சாலவுமே இவருக்கு ஒரு காத்திரம்.

1974.09.02 ஆம் திகதி கோமாரி மெதடிசன் வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் அவ்வவ்காலங்களில் ஒன்பது வித்தியாலயங்களில் கடமையாற்றி, தனது மரணத்தின் முன் வீரமுனை ஆர்.கே.எம் தமிழ் மகா வித்தியாலயத்தில் 2009.03.15 ஆம் திகதி வரை பணிகளாற்றி இந்த வித்தியாலயத்தின் கல்வி மேம்பாட்டிற்காகத் தன்னை இறுதியாக அர்ப்பணித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 1988 ஆம் ஆண்டில் கலை இலக்கியத்துறை முயற்சி களிலும் அடி எடுத்து வைத்து இருந்தார்.

ஆற்றொழுக்காக மேடை ஏறிப் பேசும் கலை, நாட்டுக்கூத்துக் கலை, நாடகக் கலை..... இன்னோரன்ன வற்றில் இவரது முயற்சிகள் அபாரம், இவ்வாறான நாட்டுக் கூத்துக்கள், நாடகங்கள்— இன்னோரன்ன வற்றை இவர் எழுதியும், இயக்கியும் அரங்கேற்றியும் இருக்கிறார்.

1973 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு காத்திரமான இலக்கியக் கலைப்பணிகளை ஆற்றிவரும் "**சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம்**" எனும் அமைப்பில் உறுப்புரிமை பெற்று இவரது சிறந்த ஈடுபாடுகளின் காரணமாக இச்சங்கத்தின் இணைப் பொதுச் செயலாளராக ஏகமனதாக நியமிக்கப்பட்டு இடையறாது இலக்கியக் கலைப் பணிகளையும் ஆற்றினார்.

இந்தக் காலகட்டங்களில் தான் அமரர் அருளம்பலமும் நானும் இணைந்து மிகவும் நெருக்கமாக இருந்தோம். அவசியங்கள் ஏற்படும் போது எனது இல்லத்திற்கு அவர் வருவதும் அவரது இல்லத்திற்கு நான் செல்வதும் வழக்கமாக ஆனது.

இந்தவிதமான தொடர்புகளின் மூலம் தான் அமரர்.அருளம்பலம் அவர்களின் அடக்கமான குணநலப் பண்புகளையும் அனுசரிப்புக்களையும் தெரியக் கூடியதாக இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் எமது "**பிரதேச கலை இலக்கிய கலாசாரப் பேரவை**" சம்மாந்துறை மண்பதியின் வரலாற்றில் இல்லாத வகையில் "**சாஹித்திய கலைப் பெருவிழா**" விமர்சையாக பயனுள்ளதாக நடைபெற வேண்டும் என்கின்ற ஆதங்கம் நெடுங்காலமாக எல்லாக் கலை இலக்கிய நெஞ்சங்களுக்கும் இருந்தது.

எமது பிரதேச செயலாளர் அவர்களைப் பதவிவழித் தலைவராகவும், கலாசார உத்தியோகத்தர் அவர்களை பதவிவழிச் செயலாளராகவும் கொண்டு இயங்கும் பிரஸ்தாப பேரவை இந்தச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஹித்திய கலைப்பெரு விழாவினை முன்னெடுத்து நடாத்த "**சாஹித்திய விழா ஏற்பாட்டுச் சபை**" ஒன்றைத் தெரிவு செய்து இருந்தது.

இந்த ஏற்பாட்டுச் சபையில் அமரர் அருளம்பலம் அவர்கள் ஒரு துணைத்தலைவராக இருந்து காத்திரமாக இயங்கினார்.

இந்த விதமான அருளம்பலம் அவர்களின் பங்களிப்போடு விழா ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்த போது தான் துரதிஷ்டமாக இடம் பெற்றது அன்னவரின் இழப்பு.

இந்த இழப்பு சம்மாந்துறை மண்பதிவாழ் இஸ்லாமிய இந்துசைவ மக்களின் கலை தொடர்பு பாலங்களுக்கும் பெரிய ஓர் இழப்பாகும்.

இந்த வித இழப்பு ஓர் அன்பான இதயத்தை ஒருவரை ஒருவர் மதித்து நடக்க வேண்டும் ஒருவருக்கு ஒருவர் உதவி வாழவேண்டும் என்கின்ற உயர்ந்த மனப்பாங்கு மிக்க அமரர் அருளம்பலம் அவர்களை இழந்து கவலையுறும் அனைத்து ஜீவன்களோடும் எமது எழுத்தாளர் சங்கத்தினரையும் இணைத்துக்கொள்வதுடன் இவரது மனைவி மக்களின் எதிர்கால சேம நலன்களுக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றவனாக இருக்கிறேன்.

அமரராகிவிட்ட எமது கலைஞர் அருளம்பலம் அவர்களின் 31ஆம் நாளை நினைவு கூறும் நிமித்தமான இந்த '**நினைவு மலர்**' விரிவதற்கு காரணமாக விளங்கிய ஏற்பாட்டுக் குழுவினருக்கும் ஆத்ம பூர்வமான எனது நன்றிகள் அர்ப்பணம்.

**கலைவேள் மாறன். யூ. ஸெயின்**
**தலைவர்**
**சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம்**

**2009. 04. 16**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

அல்லல் போம் வல்லினை போம் அன்னை வயிறில் பிறந்த
தொல்லை போம் போகாத் துயரம் போம் - நல்ல
குணமதிகமாம் அருளைக் கோபுரரத்தில் வீற்றிருக்கும்
கணபதியைக் கை தொழுதாக் கால்

## தேவாரம்

தந்தையார் தாயாருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா றெங்கனே போமாறே தே
மாயமா மிதற்கேது மகிழ வேண்டாம்
சித்தையீருமக் கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வானரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க் கிரு விசும்பி லிருக்கலாமே.

## திருவாசகம்

நிற்பார் நிற்க நில்லாதுலகில் நில்லாதினி நாம் செல்வோமே
பொற்பார் ஒப்பு ஆம்திருமேனிப் புயங்க னாள்வான்
பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாளாதே நிற்கும் பரிசென் றொருப்பிருமின்
பிற்பால் நின்று பேழுரைத்தால் பெறுதற்கரியேன் பெருமானே

## திருவிசைப்பா

வான நாடுடை மைந்தனே ஓ என்பன் வந்தருளாய் என்பன்
பா(ல்)நெய் ஐந்துடன் ஆடிய படர்சடை பால் -
வண்ணனே என்பன்
தேனமர் பொழில் சூழ் தில்லையில் திருநடம் புரிகின்ற
ஏனமாமணிப் பூணணிமார்பனே எனக்கருள் புரியாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த தூய் மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரண்மேரு விடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டெனும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு - கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலேவந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலானந்த அருவிநீர் சொரியக் கைமலர் உச்சிமேற்குவித்து
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமதான சற்குணநேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத்திநி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

### திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# பிள்ளையார் கதை

### காப்பு

கரும்புங் இளநீருங் காரெள்ளுந் செந் தேனும்
விரும்பும் அவல் பலவும் மென்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்க ளீர்க்குங்
கணபதியே யிக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவு தனிலேறி
வருமரன்றான் ஈன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத்தொழுவேன்
நின்கதைக்கு நீயென்றும் காப்பு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

### விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுத் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

ஒற்றை மருப்பு மோரிண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மன லெப்பொழுதுங்
கொண்டாக்கால் வாராது கூற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவிலமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப்பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடையாளே மூவுலகுந்தொழு தேத்துஞ்
செப்புக் கவித்த முலையாளே செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி யென்னுந் திருவே
எக்காலமு முன்னைத் தொழுவேன் இயலிசை நாடக மென்னும்
முத்தமிழ்க் கல்விக ளெல்லா முழுது மெனக்கருள் செய்தென்
சித்தந்தனி லிருந்து திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைகளைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிபறபத் திரட்டியத்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே

*கடவுளிடம் விருப்பம் நிறைவேற வேண்டுமென முறையிடாதீர்கள், உங்களுக்கு எப்போது என்ன தர வேண்டும் என்பதைப் பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும்.*

*- பாபா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை

மந்திர கிரியில் வடபா லாங்கோர்
இந்துவளர் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவு ளாலயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல் சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பர சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளில்
மற்றவர் புரியும் மாதவம் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்

பரனே சிவனே பல்லுயிர்க் குயிரே
அரனே மறையவர்க் கருள்புரிந் தருளென
அந்த வந்தணனுக் கிந்தநற் பிறப்பில்
மைந்த ரில்லையென்று மறுத்தர னுரைப்ப
எப்பரி சாயினு மெம்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் தனக்கருள் செய்கென
எமையா ளுடைய வுமையாண் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கி
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை யவளும் மனந்தளர் வுற்றுப்
பொன்றிடு மானிடப் புன்பிறப் பெய்துதல்
நன்றல்ல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்
கறைமிடற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவற்குநீ பிள்ளை யாகச்
சென்றவண் வளர்ந்து சிலபகற் கழித்தால்
மன்றல் செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத் தருள விலங்கன்மா மகளும்
பெடை மயிற்சாயற் பெண்மக வாகித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபின் னன்னையு மத்தனும்
மையார் கருங்குழல் வாணுத ல்தறன்னை
மானுட மறையோற்கு வதுவை செய்திடக்
கானமர் குழலிழைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென
மற்றவன் றன்னையுன் மணமக னாகப்
பெற்றிட லரிதெனப் பெயர்ந்தவர் பேச
அருந்தவ முயற்சியா லணுகுவே னியானெனக்
கருத்தட நெடுங்கட் கவுரியங் குரைப்ப
மருகலி கமல மலர்த்தடத் தருகிற்
தருமலி நிழற்றவச் சாலைய தமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் புரிதலும்
அரிவைத னருந்தவ மறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மானிட மேந்தும் வண்ணம தொழித்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயி றவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்ணுறுங் கூந்தற் றையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிங் கியற்றுவ தென்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடவென் றுரைத்தலும்
நன்றெனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினி லேறி மான் மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பு மெலும்பும் ப.்.றலை மாலையுஞ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் டுழலும் பித்தன் றன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரு நுமக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவ ணாணமுற் றணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதா யிருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றின னென்றலுந்
தோடமர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தனிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கையை ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைம்மலர்க் குழவி வந்தெனை யழைக்கில்
அம்மனை புகுவனென் றந்தண னுரைத்தலும்
பொற்றொடி நீபோய்த் பொய்கை னின்ற
நற்றவ முனியை நடத்திக் கொணர்கென
சிவனை யிகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுக னோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துதற் கரிதால்
மானிட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத லிளையோற் கியல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுக லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்ப னாகும்
வேதியன் பழைய விருத்தனென் றெண்ணி
ஆசனம் நல்கி யருக்கிய முதலாய்ப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்
போனகம் படைத்துப் பொரிகறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்தக லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை அமுதுசெய் வித்துச்
சந்தனச் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கர்ப்பூ ரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை யடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டி லுகந்துமுன் வைத்து
சிவனெனைப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுக நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியி னயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்கரத் திலங்கக்
கூன்மதி நிலவு கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுருவங் காட்டிமு னிற்ப
மரகத மேனி மலை மகள் தானும்
விரைவொடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே;
அரியய னிந்திர னமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுண ரிராக்கதர்
பூத ரியக்கர்கிம் புருட ரலகை
சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தி லுள்ளவரும்
மணிக்கருங் கழுத்தனை வந்தடைந் ததற்பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றலங் சூழலிக்கு வதுவைநாட் குறித்துத்
தென்றல்வந் திலங்கு முன்றி லகத்துப்
பொன்றிகழ் பவளப் பொற்கா னாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிற்பொற் றகட்டா லழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திக டோறும் பலமணி பதித்துத்
தோரண நாட்டி துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக் கேற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியு நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமக டன்னைத்
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பிரானையு மிளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடித்
கடலென விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந் தேத்த மகிழ்ந்துட னிருத்திப்
பறையொலி யோடு பனிவளை யார்ப்ப
வதுவைக் கேற்ற மறைவிதி நெறியே
சதுமுக னோமச் சடங்குக ளியற்றத்
தறுக லற்றொளி பொற்றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ வெரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழற் பூவைதன் னுடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சையம் பதிபுக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீயென
வருங்கருங் குழலாண் மற்றுமுண் டோவெனத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்துவிளை யாடல்கண்டு
டொளிர்மணி பூணா ஞரவோ னுடனே
இவ்வகை யாய்விளை யாடுவோ மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக
மதர்விழி யுமைபிடி வடிவம் தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆவினம் பெருகச்
செந்தழல் வேள்விவே தாகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல வரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோ
டைங்கர தலமு மலர்ப்பத மிரண்டும்
பவளத் தொளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டுங்
கோடி சூரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோ லகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியி னயனமு முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துட னோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க
ஆங்கவர் தங்கட் கருள்சுரந் தருளி
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்தி
ஏரணி யாலின் கீழினிதிரு வென்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ நாயகன் சிறந்தினி திருந்தபின்
வானவ ராலு மானுட ராலுங்
கானமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலு முயிரழி யாமற்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத் தடற்படை சூழக்
கைம்முகம் படைத்த கயமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண் டேங்கி
அடுந்தொழிற் குலிசத் தண்ணலு மமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்
அஞ்சலீ ரென்றவர்க் கபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனைமா முகத் தவுணனோ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறப்பட்டை கூட்டி
வென்றுவா வென்று விடைகொடுத் தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்
பாங்குறு மவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை யொடித்தவ னுரத்திற்
குற்றிட வெறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென வெழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்தவன் பொரவே
வந்தமூ டிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறின னிப்பால்
எறிந்தவெண் மருப்பங் கிமைநொடி யளவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத் தருளும்
வல்லமை தனைத்தன் மனையென மணந்தே
ஒகையோ டெழுந்தாங் குயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிங் கயல்கமு கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனை யர்ச்சித்துக்
கணபதீச் சரமெனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந் தன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக் கரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர்
யாவரும் வந்திவ ணேவல்செய் திடுநாள்
அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென் றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட டெண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத் துறுமொரு சதுர்த்தியில்
நோற்று நற்பூசை நுடங்கா தாற்றிப்
போற்றி செய்திட்டார் புலவ ரைங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமர னிருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழு தடியிணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக் கதனால்
பேழைபோல் வயிறும் பெருத்த காத்திரமுந்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டன னகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றம் குபேரனை நோக்கி
என்னை கண்டிங் கிகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவ ருரைக்குமித் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவுமெய் துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லா மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளித் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டன னந்நாண்
மார்கழித் திங்கண் மதிவளர் பக்கஞ்
சதயம் தொட்ட சட்டிநல் விரதமென்
றிதயத் தெண்ணி யாவரு நோற்றார்
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்
வைப்புட னோற்ற வகையினிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலக் துதித்த
தருமனு மிளைய தம்பி மார்களுந்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி
எண்ணிய விரதம் இடையூ றின்றிப்
பண்ணிய பொழுதுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்ந்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெய்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டளி துதையும் பசுந்துளாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளர்த்துத லுற்றான்
அக்குநீ றணியு மரன்முக லளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஒடவைத் திடும்பொன் னொத்தொளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமும் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையிற் றந்தமு மொருகையிற் பாசமும்
ஒருகையின் மோதக மொருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்தி விநாயகன்
என்றிமை யவரும் யாவருந் துதிப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்க ளுஞற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தாற்
றீங்குறா தெல்லாஞ் செயமுண் டாகுங்
கரதல மைந்துடைக் கணபதிக் குரிய
விரதமொன் றுளததை விரும்பி னோற்றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியி னினைந்த பொருள்கை கூடும்
மேவலர் தமையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூர்விக பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்
பத்தியோ ர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும வன்றன்
ஒள்ளிய வருட்டிரு வுருவுண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணா லமைத்தலுந் தகுமால்
பூசை செயுமிடம் புனித மாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடி விதானித்து
நீடிய நூல்வளை நிறைகுடத் திருத்தி
விந்தைசேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி னினைந்து தியானம் பண்ணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவாகன முத லர்க்கிய பாத்தியம்
வாகா ராசா மனம் வரை கொடுத்து
ஐந்தமிர் தத்தா லபிடே கித்துக்
கந்தஞ் சார்த்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திர னென்னுமந் திரத்தான்
மாசக லிரண்டு வத்திரஞ் சார்த்திப்
பொருந்துமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
றிருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறு குடனிரு பத்தொரு விதமாய்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்த னீசுர புத்திரன்
ஆகு வாகன னருடரு விநாயகன்
சர்வ காரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னுநா மங்களால்
ஆரம்பத்துட னர்ச்சனை பண்ணி
மோதக மப்ப முதற்பணி காரந்
தீதகன் மாங்கனி தீங்கதலிப் பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பாறயிர் போனகம்
விருப்புள சுவைபொருள் மிகவுமுன் வைத்து
உருத்திரப் பிரியவென் றுரைக்குமந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்ற நான் குபசாரமும்
மற்றவன் றிருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி யிருபிறப் பாளர்க்
குண்ணறு சுவைசே ரோதன நல்கிச்
சந்தன முத்துத் தானாந் தக்கிணை
அந்தணர்க் கீந்தட் டருச்சகன் றனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் றானமாய்க் கொடுத்து
நைமித் திகமென நவிறரு மரபால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை பூசனை யாவர் செய்தாலும்
எண்ணிய கருமம் யாவையு முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரவணின் றன்னைமுன் னர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட வெரித்தான்
உருத்திர னிவனை யுபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை யிவன்றா ளர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாள் தமயந்தி
அன்னா ளிவனை யர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனை யடைந்தாள்
ஐங்கரக் கடவுளை யர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகிரத னென்னும் பார்த்திவ னிவனை
மகிதலந் தன்னின் மலர்கொ டர்ச்சித்து
வரநதி தன்னை வையகத் தழைத்தான்
அட்டதே வதைகளு மர்ச்சித் திவனை
அட்டபோ கத்துட னமிர்தமும் பெற்றார்
உருக்குமணி யென்னு மொண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோ மளவிற் குஞ்சர முகனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொ டர்ச்சித்துத்
தாரியின் மறித்தவன் றனைப்புறங் கண்டு
யாமுமங் கவளை யின்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னி லெண் ணுதற்கரிதால்
அப்படி நீவிரு மவனையர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீ ரப்பொருள் பெறுவீர்
என்றுகன் றெறிந்தோ னெடுத்திவை யுரைப்ப
அன்றுமுற் றருமனு மனுசரு மிவனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசனை புரிந்து கட் புலனிலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையி னினைந்தவை செகத்தினிற் செயங்கொண்
டந்தமில் செல்வத் தரசியல் பெற்றார்
ஈங்கிது நிற்க விவ்விர தத்தியில்
ஓங்கிய காதைமற் றொன்றுரை செய்வாம்
கஞ்சநான் முகன்றருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாண் மாயைதன் வயிற்றிற்
சூரனென் றொருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மழித்தே
சீருடைச் சுவர்க்கத் திரவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரத் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனுங்க மமரரு முனிவரும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை யிறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்
சுடர்விடும் மணிமுடிச் சூரணை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் போமி னீரென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தூடலும்
ஓடிய வானோ ரொருங்குடன் கூடிப்
பாகவன் றன்னைப் பரிவுட னழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்
ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்
காமனை யெரித்த கடவுளினென் றஞ்சிப்
பாகவன் பயமுறப் பயமுனக் கேதென
உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்
நெற்றியி னயனமு நீயே யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் றானுந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானுமச் சபையிற் றரியா தேகி
எமையா ளுடைய வுமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை யொதுங்கி நாணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை யவன்கையி லீதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்க வொண்ணாமற்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை யாறுங்
கண்ணா றிரண்டுங் கரமீ ராறுந்
தூணெனத் திரண்ட தோளீ ராறும்
மாணயி லாதி வான்படை யுங்கொண்
டறுமுகக் கடவுளங் கவதரித் திடலும்
மறுகிய வும்பர் மகிழ்ந்துடன் கூடி
அறுமீன் களைப்பா லளித்திடென் றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்
ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனு முமையும் விடையூர்ந் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட
இருவரு மின்பா லெடுத்தெடுத் தணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனாதிபதியெனக்
காவல்கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயின்வேன் முதற்பல வாயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறு மவுணரை யொறுத்திடென் றனுப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளைப் பருகு மிரவியைப் போலத்
தகுவரென் றிவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற விந்திரன் மகளாந்
தேவ குஞ்சரியைத் திருமணம் புரிந்திட்
டமரர் கோனுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமர்ந்தினி திருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்
டமரர் மாத ரனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்தது கண்டே
அண்ட ரெல்லா மடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டுநீ யம்பிகா பதியென
இமையவ ருரைப்ப விறையவன் றானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண் டேவினை கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் றேசம் போகத்
திருத்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்தி முன்னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துத லொழிகுதி
அங்கையாற் சூதெறிந் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றர வணிந்த புனிதனைக் காணவங்
குற்றனன் றிருமா லூழ்வினை வலியாற்
சக்கர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புட னாடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் றோற்ப
இன்பவா யிதமுமை யான்வென் வேறென்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெரு மானும் யான்வென் றேனென
ஒருவர்க் கொருவ ருத்தரம் பேசி
இருவருஞ் சாட்சிய மிவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முக நோக்கிக்
காமனை யெரித்தோன் கட்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா ளென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய பொய்க்கரி யுடனங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங் குருத்து
நோக்கி யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தி லொன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற் றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகினிறத் துருப்போய்த்
துளவணி மருகனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தி லாயிரம் யோசனை
நீண்டபைப் பாந்த ணெட்டுட லெடுத்து
வளர்மருப் பொன்றுடை வள்ளல்வீற் றிருக்குங்
கிளர்சினை யாலின் கீழ்க் கிடந் தனனால்
திரிகடக் கரியின் றிருமுகக் கடவுளும்
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீ ழிருந்தான்
கம்பமா முகக் கடவுடன் பெருமையை
அம்புவி யோருக் கறிவிப் போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பநூா லேணியிற் றாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழ தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்த பின்னாளில்
ஆர்த்தக லிங்கத் தணியிழை வாங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத் தோரிழை யின்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியம் பூமியி லெழுத்தும்
ஆதி விநாயகற் கான வெழுத்தும்
மூன்றெழுத் ததனான் மொழிந்த மந்திரமுந்
தேன்றருங் குழலியர் சிந்நையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசா ரத்தால்
வரைமகன் மதலையை வழிப டாற்றி
இருபது நாளு மிப்படி நோற்று
மற்றைநா ளைங்கர மாமுகன் பிறந்த
தற்றைநாட் சதயமு மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் தெளிபுன லாடி
வாரண முகத்தோன் வதிபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவிதா னித்து
மலர்பல தொடுத்திடு மாலைக ணாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருத்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருத்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ பாதிரி
மருவிரி ஞாழன் மகிழிரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தளைக் கூவிள முதலிய சாத்தித்
தூப தீபங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்ப மோதக மவலெள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனுடன் சர்க்கரை செவ்விள நீரான்
பானறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களிடத்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொடிவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர் நாயகனா மைங்கர னருளால்
விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந் துமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்பதி நெஞ்சின்
வெஞ்சின் மிகுந்து விமலனை நோக்கி
யானிடு சாப நீக்கிய தேனென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையன் றெனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றாள் நீங்கச்
சாங்குமுன் னுரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல வக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புட னோற்றபின்
மாதுமை யடைத்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேனோர் மொழியா டெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
நின்மக னோன்பி னுறுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமி லரணை யாயிழை வணங்கிப்
பொருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறைவன் கதைசொல வேந்தியழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்தோன்
சுடர்வடி வேலோன் றொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே;
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்ணறுங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்குநீ றணியு மரன்முத லளித்த
விக்கின விநாயகன் விரதநோற் றதன்பின்
சுடர்கதை யேந்துந் துவள மாலையன்
விடப்பணி யுருவம் விட்டுநீங் கியதும்
பவுரிகொள் கூத்துடைப் பரமனு நோற்றுக்
கவுரியன் றடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
பூநறுங் தருநிழற் புரந்தரன் முதலாம்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
ஆரண மலரோன் அந்நாட் பயந்த
நாரத முனிவ னவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னி லிவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் னோற்று
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
மடலவிழ் கமல மலர்த்திரு வனையாள்
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கழலுற வெள்ளியங் கைலையி லுற்றான்
பரிவொ டிவ்விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ரமா தித்தன்
திறிகடக் கயமுகன் திருவரு ளதனால்
மறிகடற் புவிபெற வருந்திநோற் றிடுநாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவன் காதன் மடவர லொருத்தி
இற்றிடு மிடையா ளிலக்கண சுந்தரி
மெத்தவன் புடனிவ் விரதனோற் பேனென
அத்தந் தன்னி லணியிழை செறித்துச்
சிற்றிடை யாளுஞ் சிலநா ணோற்றபின்
உற்ற னோன்பி னுறுதி மறந்து
கட்டிய விழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே யலருந் தளிருமாய்ப்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை யிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்கொடி யொருத்தி
அவ்விய மில்லா ளவ்விடந் தன்னிற்
கொவ்வை யடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதை கைக்கட்டி
அப்பமோ டடைக்கா யவைபல வைத்துச்
செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் றன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி யிம்மனை யிருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென வெழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்வழி தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமைப்பொழு திவளிங் கிருக்கலாகாதென
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்
வணிகன் றனது மனைபுகுந் திருப்ப
மணியுமுத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவர் தம்மனையி லுற்றவ ளிருப்ப
வளர்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் பொற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்து வேறாகத்
தூசரு மவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான் யாரென்ன
வெம்மன மிகவு மேவி முனிவுறா
அம்மனை யவனு மகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள்புகுந் திருப்ப
அவ்வை செல்ல அகங்க டோறும்
வைதன ரெறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் னகமதிற் சென்று
இவ்வகை கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண் டுலகு கருணையோ டாண்ட
மார்த்தாண்ட ராசன் மாமக ளொருத்தி
எல்லார்க்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட விருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் புழுத்துத் தண்ணீர் வற்றிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி யெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டின் மணிவிளக் கேற்றிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின் றாட
மெத்தவுண் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை யுணர்ந்துமுன் னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக னோன்புநோற் றிடுகெனக்
கரத்துமு வேழிழைக் காப்புக் கட்டி
அப்பமு மவலு மாம்பல பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
செவ்விய தூப தீபங் காட்டி
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகா விரதத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற் றதனால்
விற்பொலி நுதலாள் மிகமகிழ்ந் திருப்ப
சக்கிர வாள சைநியத் தோடு
விக்ரமா தித்தன் வேட்டையிற் சென்று
வெவ்விய தாக மிகப்பெரி தாகி
அவ்வை தன்மனை அரசனு நணுகி
தண்ணீர் வேட்டுச் சிலர்தமை யனுப்ப
உண்ணீர்க் கரகமு மொருபணி யாரமும்
கண்ணேர் இலக்கணை கையிற் கொடுக்க
பண்ணேர் மொழியாள் பார்த்திபற் குதவலும்
ஒப்பறு படையு முயர்படை வேந்தனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை யவைகளு முண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
எவ்கை யாலும் இவள்நமக் காமென
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மௌவலங் குழலாண் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென் றரசர்க் குரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடைய யிவளுன் குலமனை யாட்டி
நலத்தக வாக நங்கைதன் நாமம்
இலக்கண சுந்தரி யாமென வுரைப்ப
தீங்கற நல்மணஞ் செய்துதா வென்ன
ஆங்கவள் வதுவைசெய் தரசனுக் களித்தபின்
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கணேர் வெள்ளிச் சிவிகையி னேற்றிக்
கொண்டூர் புகுந்து கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரி லுயர்பத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

**முற்றும்**

காகத்தைக் கண்டால் கல்லெடுத்து எறிகிறோம். ஆனால், குயிலைக் கண்டால் ரசிக்கிறோம். குயில் ஒன்றும் நமக்கு நன்மை செய்து விடவில்லை. காகத்தை விட குயிலின் குரல் இனிமையாக இருப்பதே அதை ரசிக்கக் காரணம். அதைப் போலவே நாமும் நல்ல இனிய சொற்களைப் பேசவே நாக்கினைப் பயன்படுத்த வேண்டும்.

- பாபா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

உ

திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# திருப்பள்ளியெழுச்சி

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தமாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னுந் தேன்

01. போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழினகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றி தழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே

02. அருணநிந் திரன்றிசை யணுகின னிருள்போய்
அகன்றது உதயநின் மலர்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரணிரை யறுபத் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருணிதி தரவரு மானந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே

03. கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படுகின்றது விருப்பொடு நமக்கு
தேவநற் செறிகழற் றாளினை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரி யாயெமக் கெளிவாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. இன்னிசை வீணையர் யாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கை ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே

05. பூதங்கள் தோறுநின் றாயெனி னல்லால்
போக்கிலென் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கள் முன்வந்து
ஏதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே

06. பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானிடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே

07. அது பழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரு மறியார்
இதுஅவன் றிருவுரு இவனவ னெனவே
எங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே

09. விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டார்
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதருதேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குஉயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே

10. புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் மலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

**திருச்சிற்றம்பலம்**

*அன்பினை உள்ளும் புறமும் காண்பவர்கள் மிகச் சுலபமாக கடவுளை உணர்ந்தவர் ஆவார்கள். சுயலாபத்தை தியாகம் செய்து, தூய அன்பினை பெறும் போது நம் மனதில் பொறுமை பிறக்கும்.*

*- பாபா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருவெம்பாவை

## திருச்சிற்றம்பலம்

01. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு)இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.

02. பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
போசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குத்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

03. முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. ஒண்ணித் திலநகையாய் இன்னம்புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

05. மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைத்திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்.

06. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்ருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந்தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

07. அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந்தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன் னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

09. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய்.

10. பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

12. ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லாச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொங்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புலனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்பொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்

15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

16. முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்து(உ)டையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையில்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

18. அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

19. உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்(கு) அப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்(கு) இப் பரிசே எமக்கெங்கோன் நல் குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோர் எம்பாவாய்.

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்த பரிபூரணி நளின விளி காரணி
அன்னப்பரிபுரணி சொன்ன மருள் பாகரி
திமிர்ததிமில் மதியென்ன நவனமிடுமகமாரி
தேவர்தொழு தேவிதன் தாளினை வழுத்த
தமிர்த நல்வாயு மும்மதமும் யிருபயமும்
குடவயிறு நுதல்விழியு முமைய மார்பழகும்
திமிர்தமா மும்மதத்தைந்து கரமுடையதொரு
தொந்திவயிறன் சரணமென்று நற்றுணையே

துணையான கன்னனூர் மகமாரி அம்மைதான்
தொழுதவர்க் கருள் கொடுத்தினி துகந்தருளி
இணையான தெய்வங்கள் புவிமீதி லுண்டோ
உன்கிருபை தந்து நீ எங்கள் நோய் தீர்ப்பாய்
கணையாழி கையில் தரித்தவன் தங்கையே
காவலா யிருமென்று காத்தானை யீன்றாய்
துணையாக வந்துந் அபயமே தருவாய்
சோதியே ஆதியே மகமாரி அம்மனே

மகமாரி என்றுனை நினைப்பவர் தமக்கு
வாதமொடு பித்தஞ் சிலேற்பனங் கண்ணோய்
பகைதோஷ மானதொரு நோய் கிரக தீவினைகள்
பாடுபட்டோடுமுன் நாமங்கள் சொன்னாள்
அகமகிழ்ந் தஞ்சலென் றருள்கிருபை புரிவாய்
அனலெலும் கனல்தணித் தாளும் நீ அம்மா
சகலகலை வல்லியே கன்னனூர் வந்த
சக்தியே சித்தியே கமலா சனத்தியே

கமலமுக மழகொழுகு தெரிவை யுமையவளு நீ
கலைபலதெரிதொழுகு மாகர சிவாய நீ
அமலபரமேஸ்வரி விமல கிருபாகரி
அரலோக பரரோக அனந்தரூபி நீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலமக மேருதனை வில்லாய் விளைத்த நீ
காமனோடு தச்சன் சிரந்தனை ஒடித்த நீ
அனைவரதமுங் கிருபை தந்துரட்சிப்பாய்
அதிகவர முடையதொரு மகமாரியம்மனே

அதிகவர முடையதொரு தவசம் புரிந்தாய்
அத்தனார் கிருபைதந் தகமிகமகிழ்ந்தாய்
மதிவதன் முடையதொரு மங்கை நீ அருளென்ன
மாமறையும் முத்து நீ தாவென வுரைக்க
கதியாவு பிறைசூடு நாதலுமதருளால்
கண்ணுதலு மோரொன்று சோதிக்க நல்க
சதிரமொளி கனல் தணித் ததிகவரமே பெற்ற
சத்தியே கன்னூர் மகமாரியம்மனே

கன்னனூர் வந்த நீ கம்பையில் வாழ்ந்த நீ
கரகம் தொடுத்த நீ புலையது பிடித்த நீ
முன்னமே வந்த நீ முப்புரமெரித்த நீ
மூவர்தொளு மூர்த்தி நீ மூவுலகை யாண்ட நீ
புன்னுமரை தேவி நீ பாரளந்தவளு நீ
அன்னையே மின்னையே எனை ஆளவந்த
ஆதியே சோதியே அகில நாரணியே

நாரணி நால்வருண வாதனைக்காலால்
நவரத்ன நால்வேத நல்விரத மீந்து
பூரண மதான பொற் கும்பமது வைத்து
பூவையர்கள் மலர் சொரிந்தே கவரிவீச
வாரணத்தேவர் வலுவீரர் புடை பூட்டி
காரண மதானபொற் தேர்மீதி லேறிவரு
கன்னனூராட்சி காமாட்சி யானவளே

ஆச்சி நீ அபிராமியாக வந்தாயே
ஐயனொடு பரிகலஞ்சூள வந்தாயே
பேச்சி நீ பெருமாளுடன் பிறந்தாயே
பேரான் மீனாட்சி யாகவந்தாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சிதந்தே சேரி காக்க வந்தாயே
கனல்தணித் தினித்திக வரமளித்தாயே
வாட்சி சடைச்சி யென வந்தவளும் நீயே
வடிவான ஆயிரம் கண்ணியானவளே

ஆயிரங் கண்ணி நீ அகிலமுழுதாளி நீ
அட்ஷர மதான நீ அக்கினி தணித்த நீ
வயிருபுயத்தி நீ வேத முதலான நீ
வேதாந்த ரூபி நீ வேதனை தணித்த நீ
வாயுகமலாட்சி நீ காமன் சிலைச்சி நீ
கச்சனி முலைச்சி நீ காரண நிறுத்தி நீ
தாயு நீ தந்தை நீ தந்திமுகனைப் பெற்ற
தையலே மகமாரியான மாகரியே

மாதரி புரந்தரி வரத்தரு குமாரி
மாசது விலாத பதிபோ லழகினாலே
ஆசரி யுனாதர விலா லொருவருண்டே
ஆருதவியேசதனை ஆளநினை அம்மா
பாதரி தரித்தபர நாதருடனாடும்
பாதமலரே துணைபராபர பவானி
நாதரி நடம்புரி நலம் பரிவராகி
நாதரி நடம்புரி நலம் புரிவராகி
நரலோக பராராகக்காரி அம்பிகையே

அம்மை நீ அமிர்த்ததி லன்றுதித்தாயே
அழகான அலரிமலராகி வந்தாயே
செம்மை நீ வேசியின் கனியுகந்தாயே
செவ்வந்தி மலர்மீது சேர்ந்திருந்தாயே
எம்மை யாழரசன் மகளாக வந்தாயே
எழிலான எக்கிஷந்தனில் வளர்த்தாயே
உண்மையாய் அக்கனி தனிலுதித்தாயே
உலக தனிலதிக வரமான நற்ஷாச்சியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகுதனில் மகமாரியா யவதரித்து
ஓதரிய முத்துவகை தானது உவந்து
நலமான ஈசருக்கே முத்தெளித்து
நாரி உமையாய் வந்து நற்கிருபை செய்து
கலைசெறியு மாரி உருவாகியே வந்து
காத்தானை நலமதாகவே யீன்றாய்
நலமான தொட்டியன் னிடமாக வந்து
நாதநா ராயணன் தங்கையானவளே

நாதனார் நான்முகன் கட்டளை இருந்தாலும்
நாடுமோ உனையன்றி நம்பின போக்கு
வேதனைகள் முடுகுமோ நோய்பிணிகளணுகுமோ
வேறுமொரு துஷ்ட பிசாசுவினை வருகுமோ
பாதமே கதியென்று நம்பினபேர்க்கு
பயமு முண்டோ செந்தபிணமு முயிர்கொள்ளாதோ
நீதியோ உன்னை நினைப்பவர் கிடறுவர
நீதியோ சோதியோ காத்தவராயனே

காத்து நீ சேரிகனல் மாற்றவந்தாயே
கட்டாரி சொட்டையும் கையம்பு சவளம்
மாத்திரைக் கோலுடன் சாற்று பரிவட்டம்
மத்தள முடுக்கை தவில் முக்க விருதூத
நாற்றிசை களெங்கினும் கீர்த்தி ஒலிபாட
நான்மறைகளோத வெண்சாமர மிரட்ட

போற்றி செய்தே புஷ்பமாரி மழைபொழியவரு
பூலோக ராசனே ஈஸ்வரி பாலனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழி

ஈசனுடன் நாலுமறை வேதநுதல் வாழி
இந்துமதி ஒத்தளக ஈசுபரி வாழி
வீசுபுகளுடைய ராசசிங்கமும் வாழி
விளைசென்னல் மழைபெய்து நீடுழி வாழி
வாஷமுள்ள நாடுநகரங்களும் வாழி
வரிசைபெறு விஸ்வர்குலம் மரபுமிக வாழி
ஆசுதழிழ் குற்றம்பொறுத்து நிதம் வாழி
அமிர்த பரிபூரணி வாழி வாழியதே

# மங்களம்

அரியும் மரையும் யாரையும் என்று மங்களமே
அரசர் செங்கோல் நிதந்தளைக்க ங்களமே
தெரியு மறையுன்னு சிவசமய மங்களமே
சென்னல் மழை உன்னுபுவிவாழ மங்களமே
உரைசெய் தழிழ்மாலை கபர்வொரு மங்களமே
உலகிலுள்ள நோய்பிணிகளகல மங்களமே
பரைவசூள் புவியிருள் மேவு பரையான
பகர்முத்துமாரிபத மலரு மங்களமே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளன்பு கூறல்

எங்கள் சீர்மிகு தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உடனிருந்து உதவியும் ஒத்துழைப்பும் வழங்கியவர்கள்.

எம் துன்பதுயரங்களில் பங்கு கொண்டு ஆறுதல் கூறி தேற்றிய இனிய உள்ளங்கள் முடிந்த பயணத்திற்கு அஞ்சலி செலுத்தியோர், மலர் வளையங்கள் சாற்றியோர்கள், தொலை பேசிவாயிலாக அனுதாபம் தெரிவித்தோர்கள்

கண்ணீரை கவிதையாக்கி கண்ணீரஞ்சலி செலுத்திய சர்வதேச இந்துமத குருபீடம், ஸ்ரீ சிந்தாயாத்திரைப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபை, இணக்கசபை சம்மாந்துறை, சது/வீரமுனை இ.கி.வித்தியாலயம், சது/விபுலானந்தா மகாவித்தியாலயம் மல்வத்தை, சது/ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயம், திருஞான சம்பந்தர் அறநெறிப்பாடசாலை வீரமுனை, ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலய நிருவாக சபை வீரமுனை, சீர்பாத தேவி சிறுவர் இல்லம் வீரமுனை, விநாயகர் விளையாட்டுக் கழகம் வீரமுனை, சீர்பாத தேவி சமூக சேவைகள் மன்றம் வீரமுனை, உயர் தர மாணவர்கள் 2007 வீரமுனை ஆகிய அமைப்புக்களுக்கு எங்கள் இதய பூர்வமான நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கல் உரையில் நீங்காத நினைவுகளை மீட்டிய திரு K.பொன்னம்பலம் G.S, செல்வநாயகம் (ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி), திரு. N. கோவிந்த சாமி (G.S), பரமதயாளன் (ஆசிரியர்), திரு தா.விநாயக மூர்த்தி (பொறியியலாளர்) திரு.S.ரகுநாதன்(பதில் அதிபர்), அல்-ஹாஜ் எஸ்.அப்துல் றாஸீக் J.P ஆகியோருக்கு எமது மானசீக நன்றிகள் உரித்தாகட்டும்.

31ம் நாள் நினைவு மலர் வெளியீடு செய்த வீரமுனை கல்வி சமூகத்தினர் மற்றும் ஆக்கங்கள் தந்தவர்கள், 31ம் நாள் நினைவு கூர் நிகழ்வை ஏற்பாடு செய்த சம்மாந்துறை பாவலர் பஸீல் காரியப்பர் ரசிகர் வட்டம் அமைப்பினருக்கு எங்கள் உள்ளன்பை தெரிவித்துக் கொள்கின்றோம்.

31ம் நாள் ஆத்ம சாந்திக் கிரியையில் பங்கு கொண்டவர்கள் மற்றும் எம்மோடு பக்கபலமாக நின்ற உற்றார் உறவினர்கள், ஊரவர்கள், மற்றவர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் தெய்வம் நோயினால் பீடிக்கப்பட்ட வேளையில், ஒரு வாரகாலமாக வீட்டில் பஜனை, பிரார்த்தனையில் ஈடுபட்டு தெய்வீக அருளினை ஏற்படுத்திய வீரமுனை சாயி சேவா நிலையத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

புத்தகத்தை வடிவமைத்த Brilliant Computer நிறுவனத்திற்கும் முன்அட்டையை வடிவமைத்த சர்வதேச இந்துமத குரு பீடாதிக்கும் எமது நன்றிகள்.

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை அஞ்சலி

ஊருக்காய் உழைத்திட்ட உத்தமனே ---- நீ
எனக்கு இரக்கற்பா எழுதுவாய் என்றிருந்தேன்
எனது எண்ணத்தில் மண்ணைத்தூவி
ஏகியதேன் நண்பா ... உனக்கு
என்னைத் தெரியும் எழுதத்தெரியாதென்று
இதைத்தான் விதி என்பதா?

ஆரம்பத்தில் சாதாரண கணித ஆசிரியராய்
அயராத முயற்சியால் பட்டதாரியாய்
ஆற்றல்மிகு அதிபராய்
ஆலய அரங்காவலராய்
சிறார்கள் இல்லத்து சேவகனாய்... நீ
ஆற்றிய பணிகள் ஏராளம்.
பென்சன் காலத்தை
பெறுமதி மிக்கதாக்க வேண்டுமென்பதற்காக
நொத்தாரிஸ் ஆனாய்

பண்புமிகு துணைவராய்
பாசமிகு தந்தையாய் பாட்டனாய்
ஆற்றல்மிகு ஆசானாய் அதிபராய்
அனைவர்க்கும் அன்பனாய்
ஏற்றம் மிகு
எழிய வாழ்வு வாழ்ந்து காட்டினாய்

உனது பண்பை அறியாதவர்களும்
ஏழனம் செய்பவர்களும் - ஏன்
எதிரிகளும் கூட - தேவையேற்பட்டபோது
உன்னைப் பயன்படுத்திக் கொண்டார்கள்
கறிவேப்பிலையாக - அவர்களது
எண்ணம் நீ ஒரு ஏமாளி என்று
கிராம மக்கள் பதில் சொல்லட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கு வந்தால் – நான்
உன் விருந்தாழி
பிறந்தநாள் வீடா
மங்கல, அமங்கல வீடா
பல்கலைக் கழகத்துக்கு தெரிவான
எமது எதிர்காலச் செல்வங்களின் இல்லமா
எல்லோருக்கும் என்னை – நீ
அன்புடன் அறிமுகம் செய்வாய்
எதிர்காலத்தில் என்னை
அழைத்துச் செல்வார் யாரோ?

பிறந்தவர் இறப்பது தவிர்க்கமுடியாதது என்று எம்மைத் தேற்றிக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்திபெற பிரார்த்தித்து அன்னாரது குடும்பத்துடன் இத் துயரத்தில் பங்குகொள்வதோடு நண்பனின் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்
மு. கருணாகரம் (BOC முகாமையாளர்),
வீரமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச இந்துமத குருபீடம்
"சிவநெறிச்செல்வர்"
பட்டம் வழங்கியபோது



சீர்பாததேவி சிறுவர் இல்ல
திறப்பு விழாவின்போது...



சம்மாந்துறை தொகுதி இணக்கச் சபை குழுவினருடன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமுனை R.K.M.வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பலும், செயலிழந்த நிலையும் கோழைக்கே உரியது
அவை உனக்கு வேண்டாம்.

பலவீனங்களைத் தூக்கியெறிந்து
வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஆயத்தமாகு.

துக்கங்கள் ஏற்படுவது விதியென்று கருதி
அடிபணிகின்றவன் பாவம் செய்கின்றான்


எதிர்ப்பைக் கண்டு அடிபணியாதே
போராடக் கற்றுக்கொள்

ஓடி ஒழிந்து கொள்வது பிரச்சினைகளுக்கு தீர்வாகாது
எதுவந்தாலும் முனைப்போடு எதிர்கொள்

உலகத்தை தலைகீழாக மாற்றக்கூடிய சக்தி உனக்குண்டு
அதை வெளிக்கொண்டு வா

இந்த தர்ம யுத்தத்தை விட மேன்மை தரக்கூடியது வேறு எதுவுமில்லை
இதில் உயிர்விட நேர்ந்தாலும் உயர்வே தான்

தர்ம யுத்தத்தில் இறக்கக் கூடியவனுக்கு
உலகில் எல்லாமே கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org